# தமிழ்நாடு
# தொழிலாளர் நல வாரியம்
## சென்னை




தொழிலாளர்களுக்கான
ஒன்பதாவது மாநில விளையாட்டு விழா
சிறப்பு மலர் - 1988 - கோவை

# Going the way of excellence.



Lakshmi Machine Works Ltd. as a unit, is unique. It manufactures textile machinery and CNC machines that are rewriting industry standards in performance, quality and workmanship.

Designed for excellence, the products are manufactured in collaboration with world leaders like M/s. Rieter Machine Works Ltd. of Switzerland for textile machinery and M/s. Mori Seiki Co. Ltd. of Japan for CNC machines.

Each of these products dominates the market and carries with it the Lakshmi stamp of world class quality.

**Lakshmi Machine Works Ltd.**

Sales Department

Regd. Office: Perianaickenpalayam, Coimbatore-641 020, India.

Phones 89371 to 89379 (9 lines) Telegram: Lakmaworks Telex: 0855-374 LMW IN

MAA(S)LMW 28 87


தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம்

சென்னை - 600 006

❀

தொழிலாளர்களுக்கான

1988-ம் ஆண்டு தமிழ்நாடு மாநில

# ஒன்பதாவது ஆண்டு விளையாட்டு விழா

❀

கோவை.

134255

சமர்ப்பணம்

# நேருவின் நினைவே நேரிய நினைவு !

மண்ணகம் கூடி மக்களைப் பெறலாம்
கோடி மக்களில் குணமுள ஒருவளைப்
பெறுவோர் தமக்கே பெற்றோர் எனும்பெயர்!
ஆல மரத்தில் ஆயிரம் இலைகள்
வந்தால் என்ன வாடினால் என்ன ?
வேரைப் பொறுத்தே விதியின் பயணம்
ஆணிவே ராக அமைந்தவர் சிலபேர்
உலக மெங்கிலும் உத்தமர் இருப்பினும்
இலகு பெரும்புகழ் ஏற்பவர் சிலரே !
பண்டித நேரு பரம்பரைப் பெருமையன்
உண்டும் உறங்கியும் உதவா தவனாய்
கண்டது நாடிக் கரைந்தவன் அல்லன் ;
வயது வந்து வாசலில் நின்றது
மனது இந்த மண்ணை நினைத்தது
அன்று தொடங்கிய அழியா உணர்ச்சி
என்றும் நின்றது இறுதி வரைக்கும் !
சென்றான் அவன் எனச் சேதியும் வந்தது !
தீயில் அவனுடல் சிதைவுற் றழிந்தது
நெருப்பும் அவனது நேர்மையைப் புகழ்ந்தது
காந்தியாம் அண்ணலும் கண்ணியன் நேருவும்
மாந்தர் உளவரை மறக்க வொண்ணாதவர்
சாந்தம் உரைத்த தலைவன் மகாத்மா
ஏந்தும் தொழில்களை இயக்கினான் நேரு
நேருவைப் போலொரு நேரிய மனிதன்
உள்ள வரைக்கே உலகம் பிழைக்கும் !
நாட்டுக் காகத் தன்னலன் இழந்தனன்
வீட்டை மறந்து விழுப்புண் பெற்றனன்
உத்தமர் நேருவை உளத்திற் பதித்து
அத்தகு மகன்போல் அழகிய மக்களைப்
பெற்றெடுப் போரே பேரும் பெற்றவர்
நேருவை தினமும் நினைப்போ மாக !
நினைந்த மனத்துடன் நினைப்போ மாக' -
நேரு இல்லாவிடில் நீயார், நான்யார் ;
தேரும் இதையே தேசமே கேட்க !

பாசத்தில் ஜவஹர்லால்
பழகிய பிள்ளைகள்
கண்டனர் திருவிழா
காசினி முழுவதும்

குழந்தைகள் வளரலாம்
குழந்தையின் உள்ளமும்
குழந்தையின் மழலையும்
குறும்பான செயல்களும்

தன்னிடம் கொண்டதோர்
ஜவஹர்லால் இல்லாமல்
சிறுவர்கள் ஆண்டுக்குச்
சிறப்பென்ன புகழென்ன ?

தாயிலாக் குழந்தைகள்
தவழட்டும் ; ஆடட்டும்
ஆயிரம் ஆண்டுகள்
ஆயினும் குழந்தைக்கு
நேருவே தாயெனும்
நினைவுகள் வளரட்டும்

-கவிஞர். கண்ணதாசன்





# நினைவு அஞ்சலி!



# நினைவு அஞ்சலி



ஆசிய ஜோதி பண்டித ஜவஹர்லால் நேரு

# ராஜா இல்லாத ரோஜாக்கள்

புன்னகை மொட்டுகள்
புதியநற் கவிதைகள்
வெண்ணிலாக் கீற்றுகள்
வேதத்தின் சாரங்கள்

தன்னிகரற்ற தோர்
தனிப்பெரும் செல்வங்கள்
விண்ணிலும் மண்ணிலும்
விளையாடும் கீதங்கள்

மன்னவன் நேருதன்
மனங்கொண்ட மன்றங்கள்
பொன்னினும் மணியினும்
புகழ்பெறும் அமுதங்கள்

பிள்ளைகள் அவை
பேசிடும் தெய்வங்கள்
காதலும் கவிதையும்
கடைசியிற் தள்ளியே

குழந்தையைத் தெய்வமாய்க்
கொஞ்சினான் ஜவஹர்லால்
அவனுமோர் குழந்தையாய்
அவருடன் ஆடினான்

செருகுவான் சட்டையிற்
சிவப்புரோ ஜாவினை
மறுகுவான் கண்டதும்
மழலைரோ ஜாவினை

இரக்கமும் பாசமும்
எவ்விடம் உள்ளவோ
அவ்விடம் கவிதையின்
அவதார ஸ்தலமாகும்

அணுகுண்டு தடைக்கும் அவனே காரணம்
பஞ்சசீலம் அவன் பரிசெனத் தந்தது.
கூட்டுச் சேராமையைக் கொடுத்தவன் அவனே
சிறிய நாடுகளின் விடுதலைச் சித்திரம்
பெரிய நாடுகளின் பிரியத்துக் குரியவன்
இந்தியர் பெருமையை எங்கும் வளர்த்தவன்
சந்ததி வணங்கும் ஜனநா யகத்தில்
கோடியில் ஒருவன் குன்றின்மேல் விளக்கு
பாடிய அனைத்தும் அமைதிப் பாடலே
சிந்தை உறுதியால் சினத்தை வென்றவன்
இந்தநாள் அந்தநாள் எந்தநாள் எனினும்
நேருவை நினைப்பதே நெஞ்சுக்கு நன்றி.
பண்டிதர் பிறந்தநாள் பகைமையை வென்றநாள்
ஜவாகர் பிறந்தநாள் பசுமையே வந்தநாள்
நேரு பிறந்தநாள் நேர்மையே பிறந்தநாள்
நீடுவாழிய நேருவின் நாமமே !

-கவிஞர் கண்ணதாசன்-





# வாழ்த்துரைகள்



**டாக்டர் பி. சி. அலெக்ஸாண்டர்**
மேதகு தமிழக ஆளுநர்



**திருமிகு. டாக்டர் எஸ். எஸ். சித்து,** இ.ஆ.ப.,
தமிழக மேதகு ஆளுநரின் ஆலோசகர்



திருமிகு. ஆ. பத்மநாபன், இ.ஆ.ப.,
தமிழக மேதக ஆளுநரின் ஆலோசகர்



திருமிகு. ஜி. வி. ராமகிருஷ்ணன், இ.ஆ.ப.,
தமிழக மேதகு ஆளுநரின் ஆலோசகர்



திரு. மோ. ம. இராஜேந்திரன், இ.ஆ.ப.,
தலைமை செயலர்

**திரு. ஐ. தி. ஆச்சார்யுலு, இ. ஆ. ப.**
ஆணையர் மற்றும் அரசு செயலர்

தொழிலாளர் துறை,
புனித ஜார்ஜ் கோட்டை,
சென்னை-600 009.



# வாழ்த்துச் செய்தி

தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் கோவையில் தொழிலாளர்களுக்காக தொடர்ந்து 9வது ஆண்டு விளையாட்டுப் போட்டி விழாக்களை நடத்தும் செய்தி அறிந்து மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

தொழிலாளர் நல வாரியம் தொழிலாளர்களின் மேம்பாட்டுக்காக எடுத்து வரும், செயலாற்றி வரும் பணிகளை நாடறியும், ஏடறியும். பல்வேறு முன்னேற்ற திட்டங்களைத் தீட்டி செயலாக்குவது மட்டுமின்றி விளையாட்டுப் போட்டிகள் நடத்துவதன் மூலம் பல்வேறு பகுதிகளில் இருக்கும் தொழிலாளர்கள் அனைவரும் ஒருங்கிணைந்து பங்குபெற்றுத் தாங்கள் ஒரு கூட்டுக் குடும்பத்தைச் சார்ந்தவர்கள் என்னும் எண்ணம் உருவாக்கும் வகையில் இந்தப் போட்டிகள் அமையும் என்பதில் ஐயம் இல்லை.

இனி ஆண்டுதோறும் நடைபெற இருக்கும் விளையாட்டுப் போட்டிகளில் பெரும் பங்கினைத் தொழிலாளர்களின் குடும்பத்தைச் சார்ந்தவர்கள், குறிப்பாக குழந்தைகள் பங்குபெற அதிக வாய்ப்பினை அளிக்க வேண்டுமென்று விரும்புகிறேன். மேலும் அமைப்பு ரீதியில் வராத தொழிலாளர்கள் அவர்தம் குடும்பத்தினர் ஆகியோரையும் பெருமளவில் இப்போட்டிகளில் முழுமையாகப் பங்குபெறச் செய்வதற்கான எல்லா முயற்சிகளிலும் இவ்வாரியம் ஈடுபட்டுத் தன் பணியை முழுமையாக்கிக்கொள்ள வேண்டுமென்பதே என் அவா.

நாடு போற்றும் நல்விழா இனிதே நடைபெற எனது இதயங்கனிந்த வாழ்த்துக்கள்.

**ஐ. தி. ஆச்சார்யுலு**
ஆணையர் மற்றும் அரசுச் செயலர்,
தொழிலாளர் துறை, சென்னை.

**கே. மலைச்சாமி,** இ. ஆ. ப.
தொழிலாளர் ஆணையர்

சென்னை-600 006.
நாள் : 28—6—88

# வாழ்த்துச் செய்தி



'இந்த நாட்டில் பரந்து கிடக்கின்ற தொழிற்சாலைகள்தான் நான் காணுகின்ற கோவில்கள், அதில் பணிபுரிகின்ற தொழிலாளர் பெருமக்கள்தான் நான் வணங்குகின்ற தெய்வங்கள்' எனச்சுட்டி தொழிற்சாலைகளையும், அதில் புரளும் தொழிலாளப் பெருமக்களையும் ஒரு சேர ஏத்திப்போற்றுகிறார் பேரறிஞர் அண்ணா அவர்கள். அத்தகு அருமைக்கும் பெருமைக்கும் பாத்திரமான தொழிலாளர் சமுதாயம் வாழவேண்டும் வளரவேண்டும் என்பதில் தமிழக அரசு உன்னிப்பாக இருக்கிறது. அதற்காக எடுக்கப்பட்ட நலப்பணிகள், நல்ல பணிகள் பலப்பல. அவற்றிலே ஒன்றுதான் அவர்களுக்கென எடுக்கப்பட்ட விளையாட்டுப்போட்டி. அதுவும் மாநில ரீதியில் எடுக்கப்பட்ட இப்போட்டி. இப்போட்டியை தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம், தமிழக அரசுக்காக நடத்தி நற்பெயர் ஈட்ட முனைந்தது கண்டு மகிழ்கிறேன்.

தமிழகம் முழுவதும் விரவியம், பரவியும் கிடந்த தொழிலாளர் பெருமக்களை ஒன்று திரட்டி, நேசக்கரம் நீட்டி, தோழமை உணர்வையும், அதே சமயம் போட்டி மனப்பான்மையையும் ஒருசேர வெளிப்படுத்த, இந்த விளைாட்டுப் போட்டியைப் பயன்படுத்தி உள்ளார்கள்,

மனிதனின் வளர்ச்சி முழுமைபெற அவனின் உடல், உள்ளம், ஆன்மா மூன்றும் வளர்ந்தாக வேண்டும், மூன்று வளர்ச்சிக்கும் மூல வளர்ச்சி உடல் வளர்ச்சியாகும். உடல் வளர்ச்சிக்கு ஊட்ட உணவும், உடல் வனப்புக்கும், வலிவுக்கும் உடற்பயிற்சியும், விளையாட்டும் தேவை. உழைத்து உழைத்து உரமேறிய கரங்களுக்கு, இதுபோன்ற விளையாட்டுப் போட்டிகள் மேலும் உரமேற உதவுகிறது.

இப்போட்டியில் பெருவாரியாக கலந்து கொண்டவர்களையும் அதற்கு உறுதுணையாக நின்ற நிறுவனங்களையும் வெகுவாக வரவேற்கிறேன். போட்டிகளில் வென்று, வெற்றிக்கொடி நாட்டியவர்களை வெகுவாகப் பாராட்டு கிறேன். 'வாழ்க்கையில் வெற்றி முதன்மையல்ல, போராட்டமே முதன்மை' என்ற தத்துவப்படி, வெற்றியைத் தழுவத் தவறியவர்ளுக்கு எனது ஆறுதல்கள்.

வாழ்க தொழிலாளர் சமுதாயம்! வளர்க அவர்தம் ஆக்கப்பணி!!

**கே. மலைச்சாமி**

என். கோவிந்தன், இ. ஆ. ப.
மாவட்ட ஆட்சியாளர்

மாவட்ட ஆட்சியாளர் அலுவலகம்
கோயமுத்தூர் - 641 018

நாள் : 30—6—1988



# வாழ்த்துச் செய்தி

**'உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்'** என்ற பாரதியின் கனவை நனவாக்கி வரும் கொங்கு மண்டலமாம் கோவை மாநகரில் தொழிலாளர்களுக்கான ஒன்பதாவது மாநில விளையாட்டுப் போட்டி நடத்துவது அறிந்து பெருமையும், பூரிப்பும் அடைகிறேன்.

தம் தாய்நாட்டுத் தொண்டாற்றுவதன் மூலமாகத்தான் ஒருவர் உன்னத நிலையை அடையமுடியும். அதற்கு நல்ல உடல் வலிமை வேண்டும். இது போன்ற விளையாட்டுப் போட்டிகள் உடலோம்பலைப் பேணுவதற்கு மிகவும் உறுதுணையாக இருக்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. இந்த விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்றுப் பயன் பெறுவதை அறிந்து மெத்தவும் மகிழ்கிறேன்.

தொழிலாளர்கள் நலம் சிறக்க உளமார்ந்த வாழ்த்துக்கள்.

—என். கோவிந்தன்

✓

# தமிழ்நாடு ஸ்தல ஸ்தாபன பொது சுகாதார தொழிலாளர் சம்மேளனம்

25, கோவூர் வைத்தியநாத முதலி தெரு,
சிந்தாதரிப்பேட்டை, சென்னை - 600 002.

ஆண்டுதோறும், தொழிலாளர் நல வாரியம், ஆண்டு விளையாட்டுப் போட்டிகள் தொழிலாளர்களுக்காக நடத்துகிறது.

கடந்த ஆண்டு சேலத்தில் மிகச் சிறந்த முறையில் நடைபெற்றது. இவ்வாண்டு (1988ல்) கோவையில் நடைபெறுகிறது. போக்குவரத்துத் துறையில் பணியாற்றும் தொழிலாளர்கள் அதிகமாகப் பங்கேற்கிறார்கள்.

தனியார் துறையில், மதுரா கோர்ட்ஸ், சன் பேப்பர் மில் அதிகமாகப் பணியாற்றும் தொழிலாளர்களும் பங்கேற்கிறார்கள். இனி வருங்காலங்களில் தனியார் துறையில் பணியாற்றும் தொழிலாளர்கள் அதிகமாக இவ்விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்க வேண்டுமென்று விழைகின்றேன். இவ்வாண்டு விழா இனிதே நிறையுற என் மனமார்ந்த வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**கே. டி. கே. தங்கமணி**



# T. RANGASWAMY

MEMBER

**Tamil Nadu Labour Welfare Board**

The Tamil Nadu Labour Welfare Fund Act, 1972 came into force from 1st January, 1973. Similar Acts have been passed in the other Southern States also.

The Fund constituted under the Act has been utilised for the establishment of Labour Welfare Centres, Vocational Training Centres, Tailoring Centres, Creches, Reading Rooms, Rest Houses, Holiday Homes in Hill Resorts, provision of Television Sets, Nutritious Food to children, extending assistance for purchase of text books, reimbursement of cost of spectacles, scholarships for various higher studies like Medical, Law. Engineering, Agricultural Courses etc., funeral expenses, tricycles for the handicapped, hearing aids etc. Really these benefits have improved the living conditions of the workmen. In the normal circumstances a low paid workman cannot dream of enjoying these benefits. In this respect, the activities of the Board are salutary. It is heartening to note that the Board has got numerous schemes to be launched in future.

The intention of the legislation is laudable which has benefited thousands of workmen from its inception. It is really astounding to note the benefits that flow from the Fund while the annual subscription is a meagre sum of Rs. 2 per workman only. Innumerable benefits are available not only to the contributing workman but also to his family members.

On this occasion, I whole-heartedly congratulate the Board for its service to the community in general and to the workmen in particular.

***T. RANGASWAMY***

Sent ✓

# விளையாட்டும்-தொழிலாளர் மனமகிழ்ச்சியும்



"வேடிக்கை பார்ப்பவர்க்கு
மகமகிழ்ச்சி ஊட்டும்
விளையாடித் திளைப்போர்க்கு
மேனிநலம் காட்டும்
வாடிக்கை விளையாட்டு
வருவாயும் கூட்டும்
மற்றென்ன தோழர்களே
வருக விளையாட."

நாட்டில் உள்ள தொழிலாளர்கள் இந்த நாட்டின் முதுகெலும்பு என்பது உண்மை அப்படிப்பட்ட தொழிலாளர் வர்க்கம் உழைப்புக்கு பின் ஓரளவு தேகப் பயிற்சி / விளையாட்டு இவைகளால் தன்னுடைய உழைப்பின் களைப்பை மறந்து உடல் நலம் பேண முடியும். விளையாட்டை ஒரு விளையாட்டாக நினைத்து பொழுதுபோக்காக விளையாடினாலோ, மன மகிழ்ச்சிக்காக விளையாடினாலோ விளையாடுவோருக்கு அது மனம் திடம் பெற வழி காட்டுகிறது.

சில பேர் பொருளீட்ட விளையாடும் போது விளையாடுவோருக்கு விளையாட்டு தொழிலாக மாறக்கூடும். பொழுதுபோக்கு விளையாட்டாயினும் (Amateur Game) தொழில்சார் விளையாட்டாயினும் (Professional Game) அது உடல் கட்டுக்கு மிகவும் இன்றியமையாததாக இருக்கிறது

ஆகவே பல்வேறு சாதனைகள் படைத்து வரும் நம்முடைய தொழிலாளர் நல வாரியம், ஆண்டுதோறும் மறக்காமல் தொழிலாளர்கள் விளையாட்டுப் போட்டி நடத்தி திறமை படைத்தவர்களை உருவாக்கி பரிசுகள் வழங்கி ஊக்கம் – ஆக்கமும் கொடுத்து வருகிறது. இத்துறையில் பணி புரியும் பொறுப்பாளர்கள் தொய்வின்றி பல்வேறு மாவட்டங்களில் போட்டிகளை நடத்தி தொழிலாளர் சமுதாயத்திற்கு ஒரு உற்சாகத்தை ஊட்டி வருகிறார்கள் ஆண், பெண் சமம் என்பதை காட்டும் வகையில் விளையாட்டுப் போட்டிகள் நடத்துவது, நாட்டின் ஒருமைப்பாட்டுக்கும் தாழ்வு உயர்வு என்ற மனப்பான்மையை அகற்றிட சிறந்த வழியாக விளையாட்டுப் போட்டிகள் அமைகிறது.

இந்த ஆண்டு கோவை மாவட்டத்தில் நடைபெறும் தமிழ்நாடு தொழிலாளர் நலவாரியம் ஏற்பாடு செய்து நடத்தும் விளையாட்டுப் போட்டிகள், விழாக்கள் சிறப்பாக அமைய என்னுடைய உளமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

வளர்க விளையாட்டுத் தொண்டு - வளர்க
தொழிலாளர் ஒற்றுமை — மேன்மை.

தங்கள் உண்மையுள்ள
**திருமதி. லட்சுமிமுத்து**
உறுப்பினர்
தமிழ்நாடு தொழிலாளர் நலவாரியம்.

சென்னை
நாள் : 24-6-88

து. ஜானகிராமன்,
உறுப்பினர்
தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம்

எண். 3, 35வது தெரு,
நங்கநல்லூர்,
சென்னை - 600 061.

தேதி : 22—6—1988

# வாழ்த்துச் செய்தி

ஜுன் 30, ஜுலை 1, 2 தேதிகளில் கோவையில் நடைபெற உள்ள தொழிலாளர் நல வாரியம் நடத்தும் விளையாட்டுப் போட்டிகள் எல்லா வகையிலும் வெற்றியடைய என்னுடைய மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். தொழிலாளர்களுக்கு ஆரோக்கியத்தையும், உடற்பயிற்சியையும் முழுமையாக அளிக்க இயலாதென்றாலும் கூட ஒரளவிற்காவது ஊக்கம் அளிக்கப்படுகிறது என்ற அளவில் தொழிலாளர் நல வாரியத்தை நான் பாராட்டுகிறேன்.

தொழிலாளர்களுக்கு பூரண ஆரோக்கியத்தையும், தொடர்ந்த சிறந்த உடற்பயிற்சியும் அளிக்க வாய்ப்பு கிடைக்கும் வகையில் இந்த வாரியம் சேவை செய்ய வாழ்த்துகிறேன்.

தங்களின்,
து. ஜானகிராமன்

**G. SUNDARAM**, B.Sc., B.L , ACS.

Aruna Sugars & Enterprises Ltd.,
Aruna Centre, 145, Sterling Road,
MADRAS - 600 034.

*Dear Sir,*

*I am glad to note that the Annual Sports Meet 1988 is being held at Coimbatore from 30th June to 2nd July, 1988.*

*I WISH THE MEET EVERY SUCCESS and enthusiastic participation of workers.*

*I hope this Meet will promote integrity among workmen disregard of caste, community, religion or financial status.*

*Thanking you*

*Yours faithfully,*
**C. SUNDARAM**

---

**M. CHOCKALINGAM**, B.Sc., B.L.,
ADVOCATE,
MEMBER,
AMILNADU LABOUR WELFARE BOARD.

அன்புடையீர்,

வணக்கம். தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தின் 9-வது ஆண்டு விளையாட்டு விழா நல்ல முறையில் நடைபெற்று, தொழிலாளர்கள் உற்சாகமும், ஊக்கமும் பெற எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிய பிரார்த்தித்து, NLO/TNTUCயின் சார்பில் இனிய நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி.

தங்களன்புள்ள,
**M. சொக்கலிங்கம்**

# நேருமகான்

நேருமகான்-நமது-நேருமகான் !
நேர்மையின் திருவடிவம் நேருமகான் !
மேருவைப்போல் உரங்கொண்ட நேருமகான் !
மேதினியில் புகழ்படைத்தோன் நேருமகான் !
—நேருமகான்........

அன்பின்திரு வடிவமவன் நேருமகான் !
அறிவுளத்தின் கருவூலம் நேருமகான் !
பொன்னின்திரு ஒளிவடிவம் நேருமகான் !
புன்னகையின் மென்னகைதான் நேருமகான் !
—நேருமகான்........

காந்தியத்தின் மறுவடிவம் நேருமகான் !
கண்கவரும் எழிலுருவம் கொண்டமகான் !
சாந்தியினை உயிர்மூச்சாய்க் கொண்டமகான் !
சத்தியத்தின் திருவடிவம் நேருமகான் !
—நேருமகான்........

குழந்தைமனம் கொண்டவராம் நேருமகான்
குறையகற்றும் வீரமகன் நேருமகான் !
அழகுதிரு ரோசாவாம் நேருமகான் !
அனைத்துலகின் அன்புள்ளம் நேருமகான் !
—நேருமகான்........

செங்கை அழகன்

# G. P. REDDY

**Chairman, Planters' Association of Tamil Nadu &**
**Member Tamil Nadu Labour Welfare Board**

"CANOWIE"
P. B. No. 35,
COONOOR-643 101.


*I am happy to know that the Tamil Nadu Labour Welfare Board is conducting the Annual Sports Meet, 1988 from 30-6-1988 to 2-7-1988 at Coimbatore. Imparting physical education and inculcating habit of games and sports is a part of human resources development and a nation-building effort. The Tamil Nadu Labour Welfare Board has to de commended for the laudable contribution it has been making in this direction. This Sports Meet held initially at the district level and subsequently at the State level has become very popular, and is more so in the rural plantation areas.*

*On the occasion of the Annual Sports Meet 1988, I have great pleasure in sending MY BEST WISHES FOR THE SUCCESS OF THE SPORTS MEET.*

*G. P. REDDY*

# இனம் புரியா விளையாட்டுக்கள்

1) விண்வெளியில், விரிகடலில், வீசும் காற்றில், - ஒரு
வேதவொலி முழக்கத்தில், நல்கீத மழையிசையில்,
கண்துயிலும் குழவி ஒன்றின் கவின்மிகு புன்சிரிப்பில். - நாளும்
களிநடம் புரிந்தாடும் கார்வண்ணன் விளையாட்டுக்களே !

2) காணுகின்ற காட்சிகள், கற்பனைகள், நம் கனவுத்தேரோட்டங்கள், - யாவும்
கரைதாண்டி விளையாடிக் கரைகின்ற அலைகள்தானே !
பேணுகின்ற நம் உறவுகள், பாசங்கள், சொந்தங்கள், - யாவும்
பிறைசூடி இடுகாட்டில் விளையாடும் பெம்மானின் கண்ணசைவில் !

3) தாயின் மடியில் விளையாண்ட காலத்தில் தவறுகள் செய்யவில்லை ! - மனிதன்
தடம் புரண்டு வாழ்க்கையெனும் வீதியிலே விளையாண்டான் ;
தடுமாறி வீழ்ந்தான், எழுந்தான், பின்பும் வீழ்ந்தான், - அந்தோ !
தன்னிலை புரியுமுன்பே, அவன் கணக்கை முடித்தான் தேவன் !

4) வாழ்க்கையெனும் விளையாட்டுத்திடலில் நாளும் ஆடும் மனிதன் ! - அவன்
வாழ்ந்து முடிந்தபின்பும் பிறர் மனதில் ஆடும் அவன் நினைவலைகள் !
என்னே ! இந்த இயக்கத்தின் இனம் புரியா விளையாட்டுக்கள் ! - ஓ
இறைவா ! எங்கள் தலைவா ! இதைக்கொஞ்சம் புரியவையேன் !

துணைத் தலைமைத் தொழிற்சாலை ஆய்வாளர்
சிவகாசி

# தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம்

**சென்னை-600 006**

**தலைவர் : மாண்புமிகு திரு. ஆ. பத்மநாபன் இ. ஆ. ப.**

மேதகு ஆளுநரின் ஆலோசகர்

உறுப்பினர்கள் :

1. **திரு. ஐ. தி. ஆச்சார்யுலு, இ. ஆ. ப.,**
   ஆணையாளர் மற்றும் அரசு செயலாளர், தொழிலாளர் துறை, சென்னை-9

2. **திரு. ஏ. எம். சுவாமிநாதன், இ. ஆ. ப.**
   ஆணையாளர் மற்றும் அரசு செயலாளர், நிதித்துறை, சென்னை-9

3. **திரு. கே. மலைச்சாமி, இ. ஆ. ப.,**
   தொழிலாளர் துறை ஆணையாளர், சென்னை-6

4. **திருமதி. ஷீலா ராணி சுங்கத், இ. ஆ. ப.,**
   இயக்குநர், சமூகநலத்துறை, சென்னை-35

5. **திரு. கண்ணன்**
   தென்னிந்திய வேலையளிப்பவர்களின் கூட்டமைப்பின் பிரதிநிதி

6. **திரு. டி. அரங்கசாமி,**
   தென்னிந்திய ஆலை உரிமையாளர்கள் சங்கத்தின் பிரதிநிதி

7. **திரு. ஜி. பி. ரெட்டி**
   தமிழ் நாடு தோட்ட நிறுவன உரிமையாளர்கள் சங்கத்தின் பிரதிநிதி

8. **திரு. பி. சுந்தரம்,**
   தென்னிந்திய சர்க்கரை ஆலைகள் சங்கத்தின் பிரதிநிதி

9. திரு எஸ். எம். சுந்தரம்,
தமிழ்நாடு சிறு தொழில்கள் நிறுவனங்களின் சங்க பிரதிநிதி

10. திரு எஸ் பழனியப்பன், அண்ணா தொழிற்சங்க பிரதிநிதி

11. திரு பி கோவிந்தராஜா,
தமிழ்நாடு இந்திய தேசிய தொழிற்சங்க காங்கிரஸ் பிரதிநிதி

12. திரு. கே. டி. கே. தங்கமணி, பார் அட்-லா
அகில இந்திய தொழிற்சங்க காங்கிரஸ் பிரதிநிதி

13. திரு. டி. ஜானகிராமன், சி. ஐ. டி. யு. தொழிற்சங்கப் பிரதிநிதி

14 திரு. கே. எஸ். நாராயணன்,
தமிழ்நாடு தேசிய தொழிற்சங்க காங்கிரஸ் பிரதிநிதி

15. திருமதி. தேவகி பாண்டியன், மதுரை,

16. திருமதி. லக்ஷ்மி முத்து, தாம்பரம்.

திரு. வீ. பலராமன்
செயலாளர்,
தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம்
சென்னை-6.

# தமிழ்நாடு தொழிலாளர்களுக்கான
# ஒன்பதாம் ஆண்டு மாநில விளையாட்டு விழா, 1988

## 1. அமைப்புக்குழு :

1. மாவட்ட ஆட்சித் தலைவர்.
2. தமிழ்நாடு லேபர் வெல்பேர் போட்டு செயார்.
3. கூடுதல் ஆட்சித் தலைவர்.
4.
5. மாவட்ட வழங்கல் அலுவலர் (டி. எஸ். ஓ.)
6. தொழிலாளர் துணை ஆய்வாளர், முதல் சரகம், கோவை.
7. தொழிலாளர் உதவி ஆய்வாளர், 3-ம் சரகம், கோவை.

## 2. வரவேற்பு மற்றும் போக்குவரத்து குழு :

1. தொழிலாளர் துறை இணை ஆணையாளர், கோவை.
2. தொழிலாளர் துறை துணை ஆணையாளர், கோவை.
3. தொழிலாளர் துணை ஆய்வாளர், 2-ம் சரகம், கோவை.
4. தொழிலாளர் உதவி ஆய்வாளர், 6-ம் சரகம், கோவை.
5. தொழிலாளர் உதவி ஆய்வாளர், 8:ம் சரகம், கோவை.
6. தொழிலாளர் உதவி ஆய்வாளர், முதல் சரகம், கோவை.

## 3. விளம்பரம் மற்றும் அலங்காரம் :

1. தொழிலாளர் உதவி ஆணையாளர், 1-கோவை,
2. தொழிலாளர் ஆய்வாளர், சேலம்.
3. தொழிலாளர் துணை ஆய்வாளர், பொள்ளாச்சி.
4. தொழிலாளர் உதவி ஆய்வாளர், 5-ம் சரகம், கோவை.
5. முத்திரை ஆய்வாளர்-1, கோவை.

## 4. மேடை பொறுப்புகள் :

1. தொழிலாளர் உதவி ஆணையாளர் (திரு. பாஸ்கரதாஸ் அவர்கள்).
2. தொழிலாளர் துணை ஆய்வாளர், திருப்பூர்.
3. தொழிலாளர் உதவி ஆய்வாளர், 1-ம் சரகம், திருப்பூர்.

## 5. தங்கும் இட வசதி :

1. தொழிலாளர் துறை காரியதரிசி சர்க்யூட் ஹவுஸ்.
2. தொழிலாளர் ஆணையாளர், சென்னை.-சர்க்யூட் ஹவுஸ்.
3. லேபர் வெல்பேர் போர்ட் செக்ரட்டரி, சிட்டி டவர்.
4.
5. போர்டு மெம்பர்கள்-35 பேர்கள்,

**6. இலாகா அலுவலர்கள்-ஜோனர் பிரதிநிதிகள்:**

1. தொழிலாளர் துணை ஆணையாளர், திருநெல்வேலி.
2. தொழிலாளர் துணை ஆணையாளர், மதுரை,

**7. ஆண்கள்-விளையாட்டு வீரர்கள்:**

பிரசிடென்சி உறர்ல்.
2. பத்திட்டரல் சர்ச், பார்ஷிஸ் உறகல்.
முத்திரை ஆய்வார், 2 கோவை.
தொழிலாளர் உதவி ஆய்வாளர், வெல்லூர்.
தொழிலாளர் உதவி ஆய்வாளர், மதுரை.
தொழிலாளர் ஆய்வாளர், கோவை.
தொழிலாளர் ஆய்வர், கோவை.
தொழிலாளர் துணை ஆய்வர், 3 கோவை.
லேபர் ஆபீஸர், கோவை.
தொழிலாளர் உதவி ஆய்வர், 3 திருப்பூர்.
தொ. உ. ஆ. 1 பொள்ளாச்சி.
தொ. உ. ஆ. வெல்பேர் சென்டர் ஊட்டி.
தொ. உ. ஆ. மேட்டுப்பாளையம்.

**8. உணவு குழு:**

1. தொழிலாளர் ஆய்வாளர், ஈரோடு.
2. தொழிலாளர் உதவி ஆய்வாளர், 2-ம் சரகம், கோவை,
3. தொழிலாளர் உதவி ஆய்வாளர், 3-ம் சரகம், கோவை.
4. தொழிலாளர் உதவி ஆய்வாளர், 4-ம் சரகம், கோவை.
5. தொழிலாளர் உதவி ஆய்வாளர், உடுமலை.
6. முத்திரை ஆய்வாளர், உடுமலை.

**9. ஸ்டேடியம் கமிட்டி:**

1. தொழிலாளர், துணை ஆணையாளர், சேலம்.
2. தோட்ட நிறுவன ஆய்வாளர், வால்பாறை.
3. லேபர் ஆபீஸர் ஊட்டி.
4. தொழிலாளர் உதவி ஆய்வாளர், ஊட்டி.
5. தொழிலாளர் உதவி ஆய்வாளர், வால்பாறை,
6. தொழிலாளர் உதவி ஆய்வாளர், வெல்பேர் சென்டர், வால்பாறை.

**தொழிலாளர் ஆய்வாளர்.**
**கோயமுத்தூர்.**



# கருத்துரைகள்



நல்வாழ்த்துக்கள்



# நானிலம் போற்றும் நல வாரியம்

**வீ. பலராமன்**
வாரிய செயலர்

தொழிலாளர் நலமென்பது குறுகிய நோக்கத்தினடிப்படையில் அணுகக்கூடிய ஒரு பொருளல்ல. உழைக்கும் வர்க்கத்தினர் இந்திய துணை கண்டத்தின் மக்கள் தொகையில் மிக அதிக அளவில் பங்கு கொள்வதாலும் பொருளாதார முன்னேற்றத்திற்கு அவர்கள்தான் அடிகோல்கள் என்பதாலும் அவர்தம் நலம் பேணுவதில் தனி அக்கறை காட்டப்பட வேண்டும் என்ற கருத்திற்கு மாறுபட்ட கருத்து எழ இடமே இல்லை. எனவேதான் தேசீய நீரோட்டத்தில் மத்திய மாநில அரசுகள் பல முன்னேற்றத் திட்டங்களை ஏற்படுத்துவதின் மூலம் தொழிலாளர்களின் சமுதாய பொருளாதார முன்னேற்றத்தையும் அவர்தம் உடல் நலனைப் பேணிக்காக்கும் வகைகளிலும் தணி அக்கரை செலுத்தி அவர்கள் பணி ஆற்றும் கூடத்திலும் முன்னேற்றங்களை ஏற்படுத்தி அவர்கள் வாழ்வு மலரும்படியான திட்டங்களைத் தீட்டி வருகின்றன. இந்நோக்கத்தின் அடிப்படையில் இயற்றப் படுபவை தான் தொழிலாளர் நலச் சட்டங்கள். பொதுவாக தொழிலாளர்களின் நலனைப்பேணி காப்பதென்பது சட்டத்தின் மூலமாக மட்டுமே செய்யப்படக்கூடிய ஒரு செயலாகாது. இஃது இதில் சம்பந்தப்பட்ட அனைவரும் ஒருங்கிணைந்து தொழிலாளர் நலம் ஒன்றையே தங்கள் குறிக்கோளாகக் கொண்டு தாங்களாகவே முன்வந்து ஆற்றவேண்டிய ஓர் அரும்பணி ஆகும் ஏனெனில் தொழிலாளர் நலம் என்பதில். அவர்தம் உடல்நிலை, பாதுகாப்பு, பொதுவான நல வாழ்வு, சமுதாயத்தில் தலை நிமிர்ந்து நிற்கக்கூடிய ஒரு நிலை, பொருளாதாரத்தில் ஓர் உயர்வு இவற்றை ஏற்படுத்துவதின் மூலமாக வாழ்க்கையில் அவர்களுக்குப் பிடிப்பையும் ஒரு தன்னம்பிக்கையும் ஏற்படும் நிலையை உருவாக்கும்போதுதான் அவர்கள் தங்கள் நிலையை அறிந்து இந்திய பொருளாதார முன்னேற்றத்தில் தங்களது பணியாற்றும் திறனும் உழைப்பும் மிக முக்கிய பங்கு வகிக்கிறது என்பதை உணரத்துவங்குகிறார்கள். உலக அரங்கில் ஆராய்ச்சியில் ஈடுபட்ட பன்னாட்டுத் தொழிலாளர் நிறுவனம் உள்ளிட்ட அனைத்து நிறுவனங்களும் எழுப்பிய குரல் ஒரே தொனியில் அமைந்திருப்பது இக்கருத்தின் வெளிப்பாடாகும். சுருங்கச் சொல்லின் தொழிலாளர் நலனைப்பற்றி கருத்துத் தெரிவித்த பன்னாட்டுத் தொழிலாளர் நிறுவனம், "தொழிலாளர் நலம் என்பதை பொருட் படுத்தும்போது தொழிலாளர்கள் தாங்கள் பணியாற்றும் போது நல்ல நிலையில் தங்களது முழு திறனையும் வெளிகாட்டும் முகத்தான் வேண்டி முனைந்து செயல்படும் வகையில் அனைத்து வசதிகளையும் நிர்வாகம் சுணக்கம் இன்றி ஏற்படுத்தித் தர வேண்டும் அப்போது தான் தொழிலாளிகள் தங்கள் பணியை உண்மையோடும், உற்சாகத்தோடும், முழு மனதோடும் உற்பத்தியைப் பெருக்கும் வகையிலும் உயரிய எண்ணத்தின் அடிப்படையிலும் பரந்த விரிந்த மனப்பான்மையை வளர்த்துக் கொண்டும் தங்களது பணியைச் சீரிய முறையில் ஆற்ற முற்படுவர். மேலும் தொழிலாளர் நலன் என்பதை ஒட்டு மொத்தமாக கண்ணுறும்போது அது ஒரு மிகப் பெரிய திட்டமாக அமைந்து தொழிலாளர்களின் விரக்தியை விரட்டுவதிலும் அவர்களது துன்பங்களையும் துயரங்களையும் துடைக்கும் துடுப்பாக மாறி அவர்களது உடல் நலத்தைப் பேணிக்காத்துப் புத்துணர்ச்சியை ஊட்டி அவர்களிடத்திலே புதைந்து கிடைக்கும் திறமைகளை முழுவதுமாக

வெளிக்காட்டுவதற்கான ஒரு வாய்ப்பை நல்குவதின் மூலம் தன்னுடன் பணியாற்றும் உடன் பணியாளர்களை மிஞ்சும் வகையில் ஒரு உத்வேகத்தை அவர்களிடேயே உண்டாக்குவதாக அமைய வேண்டும்'' என கருத்துத் தெரிவித்துள்ளது. இந்தப் பின்னணியில் இப்பொருளைக் கண்ணுற்ற ஓர் ஆய்வுக்குழு 'தொழிலாளர் நலம் பல நாடுகளில் பல்வேறு வழிகளில் பொருள்படக் கூடிய வகையில் வளைந்து கொடுப்பதாக அமைந்திருக்க வேண்டும் என்றும் அது ஒரு நாட்டின் சமூக நிலை, மக்களின் பழக்க வழக்கங்கள் கல்வி நிலைமை மற்றும் தொழில் வளர்ச்சி இவற்றைச் சார்ந்ததாக அமைந்திருக்க வேண்டும் என்றும் பரிந்துரை செய்தது. சுருங்கச் சொல்லுமிடத்துத் தொழிலாளர் நலம் என்பது நிர்வாகத்தினர் தாங்களாகவே முன்வந்து தொழிலாளர்கள் தங்களது முழுமனதோடு மகிழ்ச்சியுடனும் முகமலர்ச்சியுடனும் இன்னல் ஏதுமின்றி பணிபுரியும் ஒரு நிலையை தொழிற்சாலையினுள் ஏற்படுத்திக் கொடுப்பதென்றும், இந்நிலைமைகள் சட்டத்தின் மூலமாகவும் அத்தொழிலில் நிலவும் பழக்க வழக்கங்களின் அடிப்படையிலும் அவர்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை விற்கும் சந்தையில் நிலவும் நிலமைகளுக்கும் அப்பாற்பட்டதாக அமைய வேண்டும் வேண்டும் என்பதும் ஆகும்.

இந்தப் பின்னணியைத் தலையாயக் கருத்தாகக் கொண்டு தான் 1972-ம் ஆண்டு தமிழக அரசு தமிழ்நாடு தொழிலாளர் நல நிதி சட்டத்தை இயற்றியது. இச்சட்டத்தின் நோக்கமே தொழிற் சாலைகள் மற்றும் தொழில் நிறுவனங்களில் வேலைசெய்யும் தொழிலாளர்களுக்கு அவற்றின் உரிமையாளர்கள் தொழிலாளர்களின் நலனுக்காக சட்டப்படி அளிக்கப்பட்டு வரும் தொழிலாளர் நல திட்டங்களுக்கு ஈடாக அல்லது துணையாக அவர்தம் குடும்பத்தினரின் நல வாழ்வுக்காக ஒரு சில திட்டங்களைத் தீட்டி அமல்படுத்தும் போது ஒரு தொழிலாளியின் பொதுவான நலத்தில் கணிசமான முன்னேற்றம் ஏற்படும் என்பதில் ஐயமேயில்லை. எனவே தான் இச்சட்டத்தின் மூலமாக தொழிலாளர்களின் குடும்பத்தினருக்கு, சார்ந்தவர்களுக்குக் குறிப்பாக மனைவி மக்கள், சார்ந்திருக்கும் தங்கை மற்றும் குழந்தைகள் ஆகியவர்களுக்கென்றே பல்வேறு நலத் திட்டங்களைத் தீட்டி இவ்வாரியம் கடந்த பல ஆண்டுகளாக அமுலாக்கி வருகிறது. இதுவரையில் இவ்வாரியம் ஆற்றிய பணிகளை அடிப்படையாகக் கொண்டு மேலும் பல புதியத் திட்டங்களைத் தீட்டி பரவலாக அதிக அளவிலான தொழிலாளர்களும் அவர்தம் குடும்பத்தினரும் பயன் அடையும் வகையில் அமுலாக்க இருக்கிறது. தற்போது இவ்வாரியம் ஆற்றிவரும் தொண்டுகளில் சிலவற்றை இங்கு குறிப்பிடுவதிலே நான் பூரிப்படைகிறேன். இருந்தாலும் எனக்குப் பேராசை அதிகமாக உள்ளதாலும் இன்னும் பல புதியத் திட்டங்களைத் தீட்டவேண்டுமென்று இவ்வாரிய உறுப்பினக்களும் மற்றவர்களும் புதியத் தெம்புடனும், துடிப்புடனும் செயல்பட்டு வருவதாலும் இதுவரையில் இவ்வாரியம் ஆற்றிய பணிகள் என்னுடைய பேராசையின் ஒரு மிகச் சிறிய பகுதியையே நிறைவேற்றியதாக என்னால் எண்ண முடிகிறது. இருப்பினும் தொழிலாளர்கள், தொழில் நிறுவன உரிமையாளர்கள் அரசு மற்றும் பொது மக்கள் ஆகியோரின் நல்லாதரவுடனும், நல்லாசியுடனும் இவ்வாரியம் மேலும் பல தொழிலாளர் நல திட்டங்களை அமுலாக்கும் என்பதில் சற்றேனும் எனக்கு ஐயமில்லை. இவ்வாரியம் ஒரு மிகப்பெரிய நிறுவனமாக மாறி லட்சோபலட்சம் தொழிலாளர்களின் துயர் துடைக்க வேண்டுமென்பதே என்னுடைய அவா.

இதுவரையில், குறிப்பாக கடந்த 1987-88ம் நிதியாண்டில் இவ்வாரியம் ஆற்றிய நலப் பணிகளை இங்கு வரிசைப் படுத்தி அளிப்பதிலே நான் பூரிப்படைகிறேன். தொழிலாளர்களும், உரிமையாளர்களும் மேலும் தங்களது ஒத்துழைப்பை முழுமையாக இவ்வாரியத்திற்கு அளிப்பதின் மூலம் வாரியம் பணிகளை விரிவாக்க முடியும் என்ற எண்ணத்தில் வாரியத்தின் பணிகளை இங்குத் தருகிறேன் :

## தொழிலாளர்கள் மற்றும் அவரைச் சார்ந்தவர்களின் நலனுக்காக இவ்வாரியத்தால் நிறைவேற்றப்படும் திட்டங்கள்

இவ்வாரியம் தற்போது ஆற்றிவரும் நலதிட்டங்களைக் கீழே படைப்பதிலே இரும்பூது எய்துகிறேன்.

### 1. தொழிலாளர் நல மையங்கள்

தொழிலாளர் குடும்பங்களின் பொருளாதாரத்தை மனதில் கொண்டு அவர்கள் வாழ்வு சீரும் சிறப்புமாக அமைய வேண்டும், எனவே அந்தவகையில் திட்டம் தீட்டுவது நலம் என்று கருதி, இவ்வாரியம் தொழிலாளர் நல மையங்களைத் தமிழ்நாட்டின் 52 இடங்களில் இதுவரை நிறுவி உள்ளது.

| | |
|---|---|
| 1. செம்பியம் | -சென்னை |
| 2. கிண்டி | |
| 3. அம்பத்தூர் | |
| 4. திருவொற்றியூர் | |
| 5. காஞ்சிபுரம் | -செங்கற்பட்டு மாவட்டம் |
| 6. மாதவரம் | |
| 7. தாம்பரம் | |
| 8. எண்ணூர் | |
| 9. விழுப்புரம் | -தென்னார்க்காடு மாவட்டம் |
| 10. கள்ளக்குறிச்சி | |
| 11. தஞ்சாவூர் | -தஞ்சை மாவட்டம் |
| 12. கும்பகோணம் | |
| 12. மணப்பாறை | |
| 13. திருச்சி | |
| 14. டால்மியாபுரம் | -திருச்சி மாவட்டம் |
| 15. கரூர் | |
| 16. அரியமங்கலம் | |
| 17. மதுரை | -மதுரை மாவட்டம் |
| 18. பசுமலை | |
| 19. திண்டுக்கல் | -அண்ணா மாவட்டம் |
| 20. பழனி | |

| | |
|---|---|
| 21. சிவகாசி<br>22. இராஜபாளையம்<br>23. விருதுநகர்<br>24. அருப்புகோட்டை<br>25. சாத்தூர்<br>26. ஆலங்குளம் | -காமராஜர் மாவட்டம் |
| 27. ஆறுமுகநேரி<br>28. கோவில்பட்டி<br>29. தூத்துக்குடி | -வ. உ. சி. மாவட்டம் |
| 30. திருநெல்வேலி<br>31. தச்சநல்லூர்<br>32. விக்கிரமசிங்கபுரம் | -நெல்லை கட்டபொம்மன் மாவட்டம் |
| 34. நாகர்கோவில் | -கன்னியாகுமரி மாவட்டம் |
| 35. கோயம்புத்தூர்<br>36. ஒண்டிப்புதூர்<br>37. பீளமேடு<br>38. கணபதி<br>39. பெரியநாயக்கன்பாளையம்<br>40. பல்லடம்<br>41. உடுமலைப்பேட்டை | -கோவை மாவட்டம் |
| 42. காரைக்குடி | -பசும்பொன்முத்துராமலிங்க மாவட்டம் |
| 43. தாராபுரம்<br>44. ஈரோடு | -பெரியார் மாவட்டம் |
| 45. மேட்டூர் அணை<br>46. சேலம்<br>47. கொமாரபாளையம் | -சேலம் மாவட்டம் |
| 48. ஒசூர் | -தர்மபுரி மாவட்டம் |
| 49. குடியாத்தம்<br>50. வாணியம்பாடி<br>51. இராணிப்பேட்டை<br>52. வேலூர் | -வடஆர்க்காடு மாவட்டம் |

இம்மையங்கள் அனைவருக்கும் நன்மை பயக்கும் நல்லதொரு திட்டம் என்ற வகையில் அமைக்கப்பட்டுச் செயல்பட்டு வருகின்றன. இவை ஒவ்வொன்று இரு பிரிவுகளாக பிரிக்கப்பட்டு ஒரு பிரிவில் தொழிலாளர்களின் குடும்பத்தைச் சார்ந்த மனைவி, மக்கள் அல்லது சார்ந்துள்ள தங்கை ஆகியோர்களுக்குத் தையற் வகுப்புகள் நடத்தப்பெற்று வருகின்றன. இவற்றில் பயிலும் மாணவியர்களுக்கு ஓர் ஆண்டு தையற்பயிற்சி அளிக்கப்படுகிறது. ஐம்பதிற்கும் மிகாமல் ஒவ்வொரு நிலையத்திலும் மாதர்கள் பயின்று வருகின்றனர். பயிற்சியாளர் ஒவ்வொருவருக்கும் பிரதி மாதமும் ரூ. 60/- உதவித் தொகை அளிக்கப்படுகின்றன. ஆக ஓராண்டுக்கு ஒரு பயிற்சியாளருக்கு ரூ. 720/- அளிக்கப்படுகிறது. ஆனால் அவர்களுடைய பெற்றோர் அல்லது உற்றார் இடமிருந்து வரும் தொகை ஆண்டிற்கு ரூபாய் இரண்டு மட்டுமே என்பதை இத்தருணத்தில் நினைவூட்ட விரும்புகிறேன். இவ்வாறு பயிற்சி அளிக்கப்பட்ட மாணவிகள் ஆண்டின் முடிவில் தேர்வு எழுதி தேர்வில் முதல் இடம் பெற்றால் ஒரு புதிய தையல் இயந்திரம் இனாமாக ஊக்குவிக்கும் வகையில் அளிக்கப்படுகிறது.



குழந்தைகளின் வளர்ச்சிக்கு ஊட்டச் சத்தளிக்கும் முட்டை அவசியம்தானே! குழந்தைகள் காப்பகத்தில் குழந்தைகள் முட்டை உண்கின்றனர்.

இரண்டாவது பிரிவாக தொழிலாளர்களின் 2½ வயதிலிருந்து 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளின் நலனைப் பேணிக்காகும் நல்ல எண்ணத்தின் அடிப்படையிலும், அவர்கள்தான் இந்த இந்திய நாட்டின் எதிர்கால குடிமக்கள் என்ற எண்ணத்தின் அடிப்படையிலும் தமிழக அரசு மாநில முழுவதிலும் பொதுமக்களின் குழந்தைகளுக்காக சிறப்பான ஒரு சத்துணவுத் திட்டத்தை நடத்தி வருவதுபோல், இவ்வாரியம் பாலர் பள்ளிகளைத் தொழிலாளர்களின் குழந்தைகளின் நலனுக்கென்றே நடத்தி வருகிறது. ஒவ்வொரு மையத்திலும் 50 குழந்தைகள் சேர்க்கப்படுகின்றனர் இல்லக்கவலைதனை இல்லாமல் செய்திடவே தத்தித் தவழ்ந்து வரும் மழலைச் செல்வங்களைப் பாலூட்டி, சீராட்டி, தாலாட்டி வளர்ப்பதற்கென்றே இப்பள்ளிகள் நிறுவப்பட்டுள்ளன. அனைத்துக் குழந்தைகளுக்கும் ஆண்டுக்கு இரண்டு ஜோடி சீருடைகளும், சத்தான சத்துணவு, மாலையிலே 150 மில்லி லிட்டர் பாலும் தருவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளன. வாரத்திற்கு இரண்டு நாட்கள் பழம், முட்டை வழங்கப்படுகிறது. மாதமொருமுறை இலவச மருத்துவப் பரிசோதனை செய்யப்பட்டு, மருத்துவர் பரிந்துரைக்கும் மாத்திரை மருந்துகள் இலவசமாக வழங்கப்படுகின்றன.

இதற்கு மேல் தனியாக இராஜபாளையத்தில் ஒரு குழந்தை காப்பகம் நடைபெற்று வருகின்றது. வாரியம் மாதத்திற்கு ரூ. 1,000/- என்று வருடத்திற்கு 12,000 ஆயிரம் ரூபாய்

மானியமாக வழங்கி வருகிறது. ஆனல் மாநிலங்களிலுள்ள குழந்தைகள் காப்பகங்களிலுள்ள இளஞ்சிறார்கள் பெறும் அத்தனை நன்மைகளையும் இக்குழந்தைகள் பெற்று வருகின்றனர்.

### 3. தையற் பயிற்சி நிலையம்

தோட்டத் தொழிலாளர் சட்டத்தில் தோட்டங்களின் உரிமையாளர்கள் தொழிலாளர்களின் குழந்தைகளுக்காகக் காப்பகங்களைக் கட்டாயமாக நடத்த வேண்டுமென்ற நிலைமை இருக்கின்ற காரணத்தினால் குழந்தைகள் காப்பகங்கள் நடத்துவதற்கு மாறாக இவ்விடங்களில் தையல் பயிற்சி நிலையங்கள் மட்டுமே நடத்தப்பட்டு வருகின்றன. முதலில் குறிப்பிட்ட 52 நல மையங்களுக்கு மேல் கீழ் குறிப்பிட்ட 10 தையல் பயிற்சி நிலையங்களும் நடத்தப்பட்டு வருகின்றன.

| | | |
|---|---|---|
| 1. | ஹைவேவிஸ் (மணலார்) | மதுரை மாவட்டம் |
| 2. | குலசேகரம் | கன்னியாகுமரி மாவட்டம் |
| 3. | கீழ்கோதையாறு | |
| 4. | வால்பாறை | கோவை மாவட்டம் |
| 5. | முடீஸ் | |
| 6. | சோலையார் | |
| 7. | கோத்தகிரி | நீலகிரி மாவட்டம் |
| 8. | கூடலூர் | |
| 9. | பந்தலூர் | |
| 10. | தேவர் சோலை | |

4. வளர்ந்து வரும் விஞ்ஞான முன்னேற்றத்தை மனதில் கொண்டு நல மையங்களில் சென்னையில் செம்பியம் மற்றும் அம்பத்தூரில் தொழிலாளர் நல மையத்திற்கு ஒரு தொலைக் காட்சிப்பெட்டி வழங்கப்பட்டுள்ளது. மையங்களைச் சுற்றி வாழும் அத்தனை பேரும் தங்கள் வீடுகளில் தொலைக்காட்சி பெட்டி ஒன்றை வாங்க இயலவில்லையே என்று அங்கலாய்க்காமல் இவ்வாரியத்தில் உள்ள தொலைக்காட்சிப் பெட்டியின் மூலமாக பயனடைந்து வருகின்றனர். இதன் நோக்கமானது தொலை தூரச் செய்திகளைத் தொழிலாளர்கள் கண்டிட வேண்டும் என்பதுதான்.

### 5. படிப்பகங்கள்

பொன்னான ஓய்வு நேரத்தைக் கண்ணாகக் காத்திடவே பாங்குடனே பராமரித்து வரும் படிப்பகமானது தமிழ்நாட்டில் 16. தொழிலாளர்கள் நாட்டின் நடப்புகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ளும் வகையில் படிப்பகங்கள் கீழ்க்கண்ட இடங்களில் நடத்தப்பட்டு வருகின்றன.

| | | |
|---|---|---|
| 1. | செம்பியம் | சென்னை மாவட்டம் |
| 2. | தண்டையார்பேட்டை | |
| 3. | காஞ்சிபுரம் | செங்கல்பட்டு மாவட்டம் |
| 4. | எண்ணூர் | |
| 5. | தாம்பரம் | |

## பயிற்சி முகாம்



11-12-87 அன்று கோவையில் நடந்த நல மைய அமைப்பாளர்களுக்கான பயிற்சி முகாம்



16-12-87 அன்று மதுரையில் நடந்த நல மைய அமைப்பாளர்களுக்கான பயிற்சி முகாமின் முடிவு விழாவில் ஆணையர் மற்றும் அரசு செயலர் திரு ஜ. தி. ஆச்சார்யுலு கலந்து கொள்கிறார்



23-12-87 அன்று சென்னையில் நடந்த நல மைய அமைப்பாளர்களுக்கான பயிற்சி முகாமின் ஒரு காட்சி




சென்னையை யடுத்த தாம்பரத்தில் நல மையம் தொழிலாளர் இணை ஆணையர் திரு. இரா இராஜரத்தினம் அவர்கள் திறந்து வைத்தார்கள். உடனிருப்பவர்கள் திரு. மணிபாரதி, திரு. இளங்கோ, திரு. மதிலட்சுமி முத்து மற்றும் அமைப்பாளர் செல்வி சிட்டுக் கலாவதி



காரைக்குடியில் தொழிலாளர் நல மையத்தை மதுரை மண்டல இணை ஆணையர் திரு. சி. என். விஸ்வநாதன் அவர்கள் திறந்து வைக்கிறார்



சென்னையை அடுத்த மாதவரத்திலுள்ள தொழிலாளர் நல மையத்தைத் தொழிலாளர் இணை ஆணையர் திரு. M. ஆறுமுகம் அவர்கள் திறந்து வைக்கிறார்கள். உடனிருப்பவர் தொழிலாளர் துணை ஆணையர் திரு. ஜா. சந்திரமோகன்



குஜராத் மாநில தொழிலாளர் நல மையம். வாரிய செயலர் திரு. வி. பலராமன் அங்கு 22-4-88 அன்று சென்று உரையாற்றிய போது எடுத்தது. பார்வையாளர்களில் ஒரு பகுதியினர்



குஜராத் மாநில அகமதாபாத்திலுள்ள குழந்தைகள் காப்பகத்தின் குழந்தைகள்



Dr. திருமதி தேசாய், குஜராத் மாநில தொழிலாளர் நல துணை ஆணையர் அம்பத்தூர் தொழிலாளர் நல மையத்திற்கு வருகை தந்தது.

| | | | |
|---|---|---|---|
| 6. | விழுப்புரம் | — | தென்னாற்காடு மாவட்டம் |
| 7. | பசுமலை | — | மதுரை மாவட்டம் |
| 8. | பேட்டை | | நெல்லை கட்டபொம்மன் மாவட்டம் |
| 9. | தச்சநல்லூர் | | |
| 10. | விக்ரமசிங்கபுரம் | | |
| 11. | நாகர்கோவில் | | கன்னியாகுமரி மாவட்டம் |
| 12. | பீளமேடு | | கோவை மாட்டம் |
| 13. | ஒண்டிப்புதூர் | | |
| 14. | வால்பாறை | | |
| 15. | ஈரோடு | — | பெரியார் மாவட்டம் |
| 16. | மேட்டூர் அணை | — | சேலம் மாவட்டம் |

## 6. தட்டச்சு மற்றும் சுருக்கெழுத்துப்பயில பயிற்சிக் கட்டணம் மற்றும் தேர்வுக் கட்டணங்கள் வழங்குதல்

தொழிலாளர்கள், அவர்களின் துணைவியர்கள் மற்றும் அவர்களுடைய குழந்தைகள் முதலியவர்களுக்கு அரசு அங்கீகாரம் பெற்ற நிலையங்களில் தட்டச்சு மற்றும் சுருக்கெழுத்துப் பயிலுவதால் ஏற்படும் செலவினங்களை ஈடு செய்யும் வகையில் கீழ்க்குறிப்பிட்ட விதத்தில் கட்டணங்கள் உதவித் தொகையாக இரண்டு படிகளாக வழங்கப்பட்டு வருகின்றன.

| பாடம் மற்றும் நிலை | பயிற்சி கட்டணம் | பயிற்சி காலம் | தேர்வு கட்டணம் |
|---|---|---|---|
| தட்டச்சு கீழ்நிலை | ரூ. 12/- | 10 மாதங்கள் | ரூ. 10/- |
| தட்டச்சு மேல்நிலை | ரூ. 12/- | 6 மாதங்கள் | ரூ. 17/- |
| தட்டச்சு அதிவேகம் | ரூ. 12/- | 6 மாதங்கள் | ரூ. 25/- |
| சுருக்கெழுத்து கீழ்நிலை | ரூ. 10/- | 12 மாதங்கள் | ரூ. 10/- |
| சுருக்கெழுத்து மேல்நிலை | ரூ. 10/- | 12 மாதங்கள் | ரூ. 17/- |
| சுருக்கெழுத்து இடைநிலை | ரூ. 12/- | 6 மாதங்கள் | ரூ. 15/- |
| சுருக்கெழுத்து அதிவேகம் | ரூ. 12/- | 6 மாதங்கள் | ரூ. 25/- |

### பயனடைந்தோர் எண்ணிக்கை மற்றும் அளிக்கப்பட்ட தொகை

| | பயனடைந்தோரின் எண்ணிக்கை | அளிக்கப்பட்ட தொகை ரூ. |
|---|---|---|
| 1980-81 | 167 | 16,775.00 |
| 1981-82 | 305 | 23,917.00 |
| 1982-83 | 530 | 44,261.00 |
| 1983-84 | 839 | 91,121.00 |
| 1984-85 | 1021 | 1,21,036.00 |
| 1985-86 | 1010 | 1,04,701.00 |
| 1986-87 | 964 | 1,07,568.00 |
| 1987-88 | 1064 | 1,07,911.00 |

## 7. மேல்நிலைப் பள்ளியில் பயிலும் பிள்ளைகளுக்கு உதவித்தொகை வழங்குதல் ;-

தொழிலாளர்களின் பிள்ளைகள் பள்ளி இறுதி ஆண்டு தேர்வில் முதல் இரண்டு இடங்களைப் பிடிக்கும் அளவுக்கு மதிப்பெண்கள் பெறுவார்களானால் ஒவ்வொரு மாவட்டத்திலும் இவ்வாறு வரும் பிள்ளைகளுக்கு ஆளுக்கு ஆண்டிற்கு ரூ. 500/- வீதம் இரண்டு ஆண்டுகளுக்கு உதவித் தொகை வழங்கப்படுகிறது. :இதனால் கடந்த ஏழு ஆண்டுகளில் பயன் அடைந்தோர் எண்ணிக்கை; மற்றும் வழங்கப்பட்ட தொகை கீழே குறிக்கப்பட்டு உள்ளன.

### கல்வி உதவித்தொகை

| | பயனடைந்தோரின் எண்ணிக்கை | அளிக்கப்பட்ட தொகை |
|---|---|---|
| 1980-81 | 10 | 5,767.00 |
| 1981-82 | 46 | 30,196.00 |
| 1982-83 | 79 | 49,444.00 |
| 1983-84 | 148 | 90,700.00 |
| 1984-85 | 353 | 2,32,900.00 |
| 1985-86 | 507 | 3,06,100.00 |
| 1986-87 | 571 | 3,54,600.00 |
| 1987-88 | 600 | 3,69,100.00 |

## 8. தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிலும் மாணவர்களுக்கு உதவித்தொகை வழங்குதல்

தமிழகத்தில் உள்ள அங்கீகரிக்கப்பட்ட தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிலும் தொழிலாளர்களின் பிள்ளைகளில் 75 பேர்களுக்கு ஒவ்வொருவருக்கும் ஆண்டுக்கு ரூ. 300/- என்ற விகிதத்தில் இத்தொகை அளிக்கப்படுகிறது.

## 9. (அ) பொறியியல், மருத்துவம், சட்டப்படிப்புப் பயிலும் குழந்தைகளுக்கு உதவித் தொகை வழங்குதல் :

| கல்வி | நபர் | தொகை | காலம்–ஆண்டுகள் |
|---|---|---|---|
| பொறியியல் கல்வி | 25 | ஆண்டிற்கு ரூ. 1000/- | 5 |
| மருத்துவக் கல்வி | 25 | ஆண்டிற்கு ரூ. 1000/- | 5 |
| சட்டக்கல்வி | 25 | ஆண்டிற்கு ரூ. 1000/- | 5 |

### 1987-ம் ஆண்டு சேலத்தில் நடந்த விளையாட்டுப் போட்டிகளில் சில காட்சிகள்







(ஆ) பொறியியல் மற்றும் மருத்துவப் பிரிவில் பட்டையப் படிப்பு (டிப்ளமோ) பயிலும் தொழிலாளர்களின் பிள்ளைகளுக்குக் கீழ்க்கண்டவாறு உதவித்தொகை வழங்கப்படுகிறது:—

| கல்வி | நபர் | தொகை | காலம்-ஆண்டுகள் |
|---|---|---|---|
| பொறியியல் கல்வி | 150 | ஆண்டிற்கு ரூ. 600/- | 3 |
| மருத்துவக் கல்வி | 25 | ஆண்டிற்கு ரூ. 600/- | 3 |

**10. புத்தகம் வாங்க உதவித்தொகை**

தமிழ் நாட்டில் உள்ள உயர்நிலைப் பள்ளிகளில் பயிலும் தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு ஒன்பதாம் வகுப்பு முதல் அவர்கள் தங்களுடைய இறுதிக் கல்வியை முடிக்கும் வரையில் கீழ்க்கண்ட அட்டவணையில் குறிக்கப்பட்ட தொகை உதவித்தொகையாக வழங்கப்பட்டது.

**புத்தக உதவித் திட்டம்**

| ஆண்டு | பயனடைந்தோரின் எண்ணிக்கை | அளிக்கப்பட்ட தொகை |
|---|---|---|
| 1980-81 | 282 | 3,965.00 |
| 1981-82 | 3,564 | 48,195.00 |
| 1982-83 | 8,390 | 1,30,605.00 |
| 1983-84 | 22,749 | 3,85,567.65 |
| 1984-85 | 54,422 | 17,73,335.65 |
| 1985-86 | 49,019 | 14,83,886.90 |
| 1986-87 | 16,125 | 6,10,549.95 |
| 1987-88 | 9,179 | 3,54,902.60 |

**11. ஆண்டுதோறும் விளையாட்டுப் போட்டிகள்:**

தொழிலாளர்கள் தங்கள் உடற்கட்டை நல்ல முறையிலே பேணிக்காப்பதன் மூலம் தங்களைக் காத்துக்கொண்டு, தங்களைச் சார்ந்து இருக்கும் நிறுவனத்தின் உற்பத்தியைப் பெருக்கிக்கொள்வதற்காகவும், ஒய்வு பெற்ற பின்னரும் அவர்கள் பல்லாண்டு நல்வாழ்வு வாழ வேண்டும் என்ற அடிப்படை எண்ணத்திலும் ஒவ்வொர் ஆண்டும் மாவட்ட, மண்டல மற்றும் மாநில அளவில் பல்வேறு விதமான விளையாட்டுப் போட்டிகள் ஆண், பெண், இரு பாலாருக்கும் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன. இதில் இப்போது 1000/-க்கும் மேலான விளையாட்டு வீரர்களும், வீராங்கனைகளும் கலந்து கொள்வது குறிப்பிட்டத்தக்கது ஆகும். இவர்களை நல்ல விளையாட்டு வீரர்களாக பயிற்றுவித்து மாநிலத்தில் நடக்க இருக்கும் இதரப் போட்டிகளிலும் தேசிய அளவிலே நடக்க இருக்கும் போட்டிகளிலும் பங்கு பெறும் அளவிற்கு இவர்களை ஊக்குவிக்கவேண்டும் என்பதே இப்போட்டியின் தலையாய நோக்கம் ஆகும். கடந்த ஆண்டு மதுரையில் நடைபெற்ற மாநில விளையாட்டுப் போட்டிகளின் சில படங்களைக் காணலாம்.

## 12. தொழிலாளர் தங்கும் விடுதிகள் :

உழைத்து உழைத்து அலுத்தத் தொழிலாளர் உடல்-உள்ளஓய்வு வேண்டி உல்லாசப் பயணமாய் ஊரெங்கும் சுற்றிவந்து, தங்க இடம்தேடித் தவித்திடாமல், குறைவான கட்டணத்தில் நிறைவான வசதியுடன் தங்க நெல்லை கட்டபொம்மன், நெல்லை மாவட்டம், குற்றலாத்தில் திரு. வி. க. இல்லம் என்ற பெயரில் ஓர் ஓய்வு இல்லம் கடந்த 20-9-83ல் திறக்கப்பட்டு நடத்து வருகின்றது. இங்கு இரண்டு படுக்கைகள் கொண்ட 8 அறைகளும் உள்ளன. இந்த இல்லத்தில் 58 பேர் வரை தங்கலாம். விரிவான வசதிகள் செய்யப்பட்டு உள்ள இந்த அறைகளுக்குத் தொழிலாளர்கள் செலுத்த வேண்டிய தின வாடகையைச் சற்றே கண்ணுறுங்கள்.




திரு. சரவணன், தொழிலாளர் துணை ஆணையர்
ஆறுமுகனேரி மையத்தைத் திறந்து வைக்கிறார்.

### தொழிலாளர்கள் நல நிதிக்குச் சந்தா செலுத்தும் தொழிலாளர்களுக்கு :

| | | |
|---|---|---|
| துயிலிடம் | : | ஒரு படுக்கைக்கு ஒரு நாளைக்கு ஒரு நபருக்கு ரூ. 3/- வீதம். |
| இரண்டு படுக்கைகள் கொண்ட தனி அறை | : | ஒரு படுக்கைக்கு ஒரு நாளைக்கு ஒரு நபருக்கு ரூ. 5/-வீதம். |



13-6-88 அன்று மாமல்லபுரத்திலுள்ள 'நேரு ஓய்வு' இல்லத் திறப்பு விழாவின் போது ஆசிய ஜோதியின் படத்தைத் திறந்து வைப்பவர் தொழிலாளர் ஆணையர் திரு. கே. மலைச்சாமி, இ.ஆ.ப.



13-6-88 அன்று மாமல்லபுரத்தில் ரு. 21 லட்சத்தில் கட்டப்பட்ட தொழிலாளர்களுக்கான 'நேரு ஓய்வு இல்ல' கட்டிடத்தை மேதகு ஆளுநரின் ஆலோசகர் திருமிகு. ஆ. பத்மநாபன் இ.ஆ.ப., அவர்கள் திறந்து வைக்கிறார்கள். உடனிருப்பது அரசு செயலாளரும் வாரிய உறுப்பினரும்



கோவை மாவட்ட வால்பாறையில் 'சிங்கார வேலர்' ஓய்வு இல்லத்தை மாண்புமிகு S. ராமசந்திரன், வாரியத் தலைவர் திறந்து வைக்கிறார்



13-6-88 அன்று மாமல்லபுரத்திலுள்ள 'நேரு ஓய்வு' இல்லத்தை மேதகு ஆளுநரின் ஆலோசகர் திருமிகு. ஆ. பத்மநாபன், இ.ஆ.ப., அவர்கள் திறந்து வைக்கும் காட்சி. உடனிருப்பவர்கள் அரசு செயலர் திரு. ஜ. தி. ஆச்சார்யுலு, இ.ஆ.ப., மற்றும் தொழிலாளர் ஆணையர் திரு. கே. மலைச்சாமி, இ.ஆ.ப.,

**மற்ற பொது மக்களுக்கு**

| | | சாதாரண காலம் | சாரல் காலம் |
|---|---|---|---|
| துயிலிடம் | : | சாதாரண ஒரு படுக்கைக்கு ஒரு நாளைக்கு ஒரு நபருக்கு ரூ. 10/- வீதம் | ரூ 15/- |
| இரண்டு படுக்கைகள் கொண்ட தனி அறை | : | ஒரு நபருக்கு ரூ. 20/- வீதம் | ரூ 30/- |

கோவை மாவட்டம், வால்பாறையில் ஓர் ஓய்வு இல்லம் 6—2—82 முதல் இன்று வரையில் ஒரு நாளைக்கு ரூ. 1-50 என்ற விகிதத்தில் வாடகையாக வசூலிக்கப்பட்டு நடத்தப்பட்டு வந்தது. இங்கு 15 பேர் தங்குவதற்கான வசதிகள் செய்யப்பட்டுள்ளன. வால்பாறையில் இதற்கென ஒரு பெரிய தனியார் கட்டிடம் விலைக்கு வாங்கப்பட்டு இருக்கிறது என்பது ஒரு மகிழ்ச்சிக்குரிய செய்தி ஆகும், தற்போது ஒரு நாளைக்கு ரூ. 3/- வீதத்தில் வாடகையாக வசூலிக்கப்பட்டு வருகிறது.

செங்கற்பட்டு மாவட்டத்தில் பல்லவன் கோட்டை, மாமல்லபுரத்தில் 44 படுக்கைகள் கொண்ட ஓர் ஓய்வு இல்லம் கட்டி முடிக்கப்பட்டு, 13-6-88 அன்று மேதகு ஆளுநரின் ஆலோசகர் திரு. ஆ. பத்மநாபன் அவர்களால் திறந்து வைக்கப்பட்டு இயங்கி வருகிறது என்பதும் ஒரு மகிழ்ச்சிக்குரிய செய்தி ஆகும்.

## 13. காசநோய் மருத்துவமனைகளில் தொழிலாளர்களுக்கு தனிப்பிரிவு

சென்னைக்கு அடுத்த தாம்பரத்தில் உள்ள காசநோய் மருத்துவமனையில் தொழிலாளர்களுக்காக தனியாக 26 படுக்கைகள் கொண்ட ஒரு பிரிவு ரூ. 3.64 லட்ச செலவில் கட்டப்பட்டு நடத்தப்பட்டு வருகிறது. அங்குத் தங்கி சிகிச்சை பெறும் தொழிலாளர்களின் பொழுதுபோக்கிற்காக ஒரு தொலைக்காட்சிப் பெட்டியும் வாரியத்தால் வழங்கப்பட்டு உள்ளது. கோவை மாவட்டம் திருப்பூர் அரசு மருத்துவமனையில் 26 படுக்கைகள் கொண்ட காசநோய் பிரிவு கட்டி முடிக்கப்பட்டுத் திறக்கும் தருவாயில் உள்ளது.



மதுரை ஆஸ்டின் பட்டியில் ரூ, 9-25 லட்சம் செலவில் கட்டபட இருக்கும் தொழிலாளர்களுக்கான, காசநோய்ப் பிரிவுக்கான அடிக்கல்லை அரசு செயலர் திரு, ஜ தி. ஆச்சார்யுலு நாட்டுகிறார்.

## 14. கண்பார்வை பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு இலவசமாக மூக்குக் கண்ணாடி வழங்குதல் :

41 வயது முடிவடைந்து கண்பார்வை பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு மூக்குக் கண்ணாடி வாங்க உதவித் தொகையாக ஆளுக்கு ரூ. 60/- வரை வாரியம் வழங்கி வருகிறது. இத் திட்டத்தின்கீழ் இதுவரையில் பயன் அடைந்தோர்களின் புள்ளி விவரங்களைக் கீழே காணலாம் :—

**மூக்குக் கண்ணாடி மீள வழங்கும் திட்டம்**

| ஆண்டு | பயனடைந்தோரின் எண்ணிக்கை | அளிக்கப்பட்ட தொகை |
|---|---|---|
| 1980—81 | 1007 | 34,096.00 |
| 1981—82 | 1154 | 59,965.00 |
| 1982—83 | 287 | 14,200.00 |
| 1983—84 | 804 | 44,605.00 |
| 1984—85 | 948 | 55,090.00 |
| 1985—86 | 882 | 52,394.00 |
| 1986—87 | 2232 | 1,28,257.00 |
| 1987—88 | 2606 | 1,57,105.50 |

## 15, தொழிலாளி இறந்தால் அவருடைய ஈமச்சடங்குக்கு நிதி வழங்குதல் :

நாளொரு மேனியும் நல்லுழைப்பை நல்கி, உடல்நலமின்றி காலன்கரம் நீட்டி, அழைத்துச் செல்ல நேரிடின் அவருடைய ஈமச்சடங்கிற்கு ரூ.200/- அவரது குடும்பத்திற்கு வழங்கப்படுகிறது.

**இவ்வாறு பயன்பெற்றோரின் எண்ணிக்கை**

| ஆண்டு | பயன்பெற்றோரின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட தொகை |
|---|---|---|
| 1980—81 | 6 | 1,200.00 |
| 1981—82 | 272 | 54,200.00 |
| 1982—83 | 500 | 1,00,000.00 |
| 1983—84 | 710 | 1,42,000.00 |
| 1984—85 | 589 | 1,17,800.00 |
| 1985—86 | 684 | 1,36,000.00 |
| 1986—87 | 751 | 1,50,200.00 |
| 1987—88 | 671 | 1,54,800.00 |

## 16. உடல் ஊனமுற்ற தொழிலாளர்களுக்கும். மற்றும் தொழிலாளர்களின் உடல் ஊனமுற்ற குழந்தைகளுக்கும் செயற்கை உறுப்புகள் வழங்குதல் :

செயற்கை உறுப்புகள் வேறு எந்த வகையிலும் கிடைக்கப் பெறாத தொழிலாளர்களுக்கும், அவர்களின் குழந்தைகளுக்கும் செயற்கை உறுப்புகள் தேவைக்கு ஏற்றவாறு வழங்கப்படுகின்றன.

**இத்திட்டத்தின் கீழ் பயனடைந்தோர்**

| ஆண்டு | பயன்பெற்றோரின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட தொகை |
|---|---|---|
| 1983—84 | 2 | 2,795.00 |
| 1984—85 | 6 | 1,820.85 |
| 1985—86 | 30 | 7,051.65 |
| 1986—87 | — | — |
| 1987—88 | 7 | 2,935.60 |

## 17. காது கேட்காத தொழிலாளர்களுக்கும். தொழிலாளர்களின் காது கேட்காத குழந்தைகளுக்கும் காது கேட்கும் கருவி பின் வருமாறு இலவசமாக வழங்கப்படுகிறது :

| ஆண்டு | பயன்பெற்றோரின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட தொகை |
|---|---|---|
| 1984—85 | 7 பேர் | 2,893.00 |
| 1985—86 | 17 பேர் | 7,448.00 |
| 1986—87 | — | — |
| 1987—88 | 83 பேர் | 19,458.00 |

## 18. கால்கள் ஊனமுற்ற தொழிலாளர்களுக்கு :

காலத்தின் கோலத்தால் கால்களை இழந்து, சுற்றிச் சுழல முடியாத தொழிலாளர்களுக்கு மூன்று சக்கர வண்டிகள் வாரியத்தால் இனாமாக வழங்கப்படுகிறது.

இவ்வாறு நன்மை பெற்றவர்களின் எண்ணிக்கை பின்வருமாறு :

**3. சக்கர வண்டி வழங்கும் திட்டம்**

| ஆண்டு | பயன்பெற்றோரின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட தொகை |
|---|---|---|
| 1984—85 | 5 | 6,754.20 |
| 1985—86 | 8 | 12,817.50 |
| 1986—87 | 5 | 7,800.00 |
| 1987—88 | 8 | 12,630.00 |

## 19. தொழிற்சங்க நிர்வாகிகளுக்காக சென்னையில் தங்கும் விடுதி ;

தொழிலாளர் கோரிக்கைகளுக்குத் தீர்வு காண அல்லது தொழில் நீதி மன்றங்களில் வழக்காட சென்னை நகருக்கு வரும் தொழிற்சங்க தலைவர்கள், தொழிலாளர் பிரதிநிதிகள் சென்னை மாவட்ட நகரில் தங்குவதற்காக மறைந்த மாவீரர் ஜீவா அவர்களின் பெயரிலேயே ஓர் இல்லம் கட்டப்பட்டு, கடந்த 18-11-81 முதல் சீரும் சிறப்புமாக இயங்கி வருகின்றது. இங்கு இரண்டு படுக்கைகள் கொண்ட 8 அறைகளும் 6 படுக்கைகள் கொண்ட 5 துயிலிடமும் உள்ளன. அனைத்து வசதிகளும் செய்யப்பட்டு இருந்தும். மிகக்குறைந்த வாடகையில் தங்குவதற்கு இடம் ஏற்பாடு செய்து தரப்படுகிறது.

1. 6 படுக்கைகள் கொண்ட பொது அறை வாடகை ஒரு நாளுக்கு ரூ. 3/- மட்டும்;
2. 2 படுக்கைகள் கொண்ட தனி அறை ஒரு நாளைக்கு தலா ரூ. 5/– மட்டும்;
3. இந்த இல்லம் கட்டுவதற்காக தமிழக அரசு ரூ.2 இலட்சம் மான்யமாகவும் 5 கிரவுண்டும் 1950 சதுர அடியும் கொண்ட நிலப்பரப்பை இனாமாகவும் வாரியத்திற்கு அளித்துள்ளது.

## 20. எதிர்காலத் திட்டங்கள் :

1. சென்னை

தஞ்சாவூர் ஆகிய இடங்களில் நல மையங்கள் துவங்க திட்டமிடப்பட்டுள்ளன.

2. மலைப்பகுதிகளில் தோட்டத் தொழில்களில் ஈடுபட்டு இருக்கும் தொழிலாளர்களின் குழந்தைகளின் நலனுக்காக தையற் பயிற்சி நிலையங்கள் தமிழ் நாட்டில் பல்வேறு மலைப்பகுதிகளில் துவங்கப்பட இருக்கின்றன.

3. ஒய்வு இல்லங்கள் :

சுற்றலா செல்லும் தொழிலாளத் தோழர்களும், அவர் தம் குடும்பங்களும் இடுக்கண் இன்றி சுகமாக தங்குவதற்காக உதகமண்டலத்திலும் கொடைக்கானல் போன்ற கோடைக் காலங்களில் ஓய்வு பெறும் பகுதிகளிலும் தெய்வ வழிபாட்டிற்காகச் செல்லும் தொழிலளர்களின் வசதிக்காக இராமநாதபுரம் மாவட்டம் இராமேஸ்வரத்திலும் ஒய்வு இல்லங்கள் கட்ட முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

4. காசநோய் மருத்துவமனையில் தொழிலாளர்களின் தனிப்பிரிவு :

கீழ்க்கண்ட இடங்களிலுள்ள அரசு மருத்துவமனையில் தொழிலாளர்களுக்குக் காசநோய் சிகிச்சைக்காக தனிப்பிரிவு கட்டப்பட்டு வருகின்றது.

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | ஆசாரிபள்ளம் | — குமரி மாவட்டம் | — 30 | படுக்கைகள் |
| 2. | திருப்பூர் | — கோவை மாவட்டம் | — 26 | ,, |
| 3. | பெண்ணாத்தூர் | — வ. ஆ. மாவட்டம் | — 24 | ,, |
| 4. | ஆஸ்டின்பட்டி | — மதுரை மாவட்டம் | — 20 | ,, |

இவற்றில் ஆசாரிபள்ளம், மற்றும் திருப்பூர் ஆகிய இடங்கள் திறக்கப்படவேண்டிய நிலையில் உள்ளது மேற்கண்ட புள்ளிவிவரங்களை நோக்குங்கால், தொழிலாளர்கள் இவ்வாரியத்திற்கு ஆண்டு தோறும் செலுத்தும் பங்குத்தொகை அளவில் மிகவும் குறுகி இருந்தும், அவர்கள் பெறும் பலன்களை எக்கண்ணோட்டத்தில் பார்க்கும் போதும் பல மடங்காக இருப்பது வெள்ளிடை மலை, தொழிலாளர்கள் தங்களுடைய. பங்குத் தொகையைத் தவறாமல் செலுத்துவதன் மூலம் இவ்வாரியத்தில் நல்ல பணிகளைப் பெருக்கி துரித நடவடிக்கை எடுத்து வேறு பல முன்னேற்ற திட்டங்களைத் தீட்ட அது வழிகோலும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

அகன்று விரிந்த ஆலமரமான இவ்வாரியம் பல வருடங்கள் தொழிலாளர்களென்ற பறவைகள் கூடு கட்டித் தங்கி நலமுடன் வாழ உங்கள் அனைவரின் ஒத்துழைப்பையும் தொடர்ந்து வழங்க வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

அன்புடன்

செயலாளர்,
தமிழ்நாடு தொழிலாளர் நலவாரியம்,
சென்னை-6.

# ஒலிம்பிக் விளையாட்டின் தோற்றம்

பண்டைய கிரேக்கர்கள் ஒலிம்பியாட் என்ற இடத்தில் நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை தங்களுடைய தலைமை கடவுள் ஆகிய சூயிஸின் நினைவாக விழா ஒன்று எடுப்பது அவர்களின் வழக்கம். எனவே நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை நிகழ்த்தப் படுகின்ற ஒலிம்பிக் விளையாட்டு ஆண்டு ஒலிம்பியாட் என்று அழைக்கப்பட்டு வருகிறது. முதன் முதலாக ஒலிம்பிக் பந்தயங்கள் 1776 கி.மு. ஆண்டில் நடத்தப்பட்டது. கி.பி. 94ம் ஆண்டு வரை நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை இந்தப் பந்தயங்கள் ஒழுங்காக நடத்தப்பட்டு வந்தன. இவ்விளையாட்டுகள் மனித உயிருக்கும் உடமைக்கும் விபரீதங்களை ஏற்படுத்துகின்றன என்று கருதிய தியோடசியஸ் என்ற ரோமானிய மன்னன் இவ்விளையாட்டு நிகழ்ச்சிகளை தடை செய்து விட்டான்.

இந்த ஒலிம்பிக் பந்தய நிகழ்ச்சிகளில் ஓட்டம், தாண்டுதல், எரிதல், மல்யுத்தம் மற்றும் குதிரைப் பந்தயம் ஆகியன அடங்கும். இந்த பந்தயங்களில் வெற்றி பெற்றவர்களுக்கு ஒலிம்பியன் பள்ளத்தாக்கில் உள்ள புனித தோட்டத்தில் உள்ள ஒலிவ மரத்தின் இலைகளால் பின்னப்பட்ட மாலையும், பனை ஓலையும் பரிசாக வழங்கப்பட்டு வந்தன. ஒலிம்பிக் பந்தயங்களில் வெற்றிவாகை சூடியவர்கள் அந்த நாட்டில் தேசிய வீரர்களாக கௌரவிக்கப்பட்டு மிகப்பெரிய அளவில் மதிக்கப்பட்டும் வந்திருக்கிறார்கள். அந்த நாட்டின் மிக உயர்ந்த கௌரவம் அவர்களுக்கு அளிக்கப்பட்டு வந்தது.

## ஒலிம்பிக் நகரங்கள்

| | |
|---|---|
| கிரேக்கநாடு (ஏதன்ஸ்) | 1896 |
| பிரான்ஸ் (பாரீஸ்) | 1900 |
| அமெரிக்கா (புனிதலூயிஸ்) | 1904 |
| இங்கிலாந்து (லண்டன்) | 1908 |
| ஸ்வீடன் (ஸ்டாக்ஹோம்) | 1912 |
| போட்டிகள் நடைபெறவில்லை | 1916 |
| பெல்ஜியம் (ஆண்ட்வர்ப்) | 1920 |
| பிரான்ஸ் (பாரீஸ்) | 1924 |
| நெதர்லாந்து (ஆம்ஸ்டர்டாம்) | 1928 |
| அமெரிக்கா (லாஸ்ஏஞ்ஜல்ஸ்) | 1932 |
| ஜெர்மனி (பெர்லின்) | 1936 |
| உலகப்போர் போட்டிகள் நடைபெறவில்லை | 1940 |
| ,, ,, ,, | 1944 |
| இங்கிலாந்து (லண்டன்) | 1948 |
| பின்லாந்து (ஹெல்சிங்கி) | 1952 |
| ஆஸ்திரேலியா (மெல்பர்ன்) | 1956 |
| இத்தாலி (ரோம்) | 1960 |
| ஜப்பான் டோக்கியோ) | 1964 |
| மெக்ஸிக்கோ (மெக்ஸிக்கோ) | 1968 |
| மேற்கு ஜெர்மனி (ம்யூனிக்) | 1972 |
| கனடா (மான்ட்ரீல்) | 1976 |
| ரஷ்யா (மாஸ்கோ) | 1980 |
| அமெரிக்கா (லாஸ் ஏஞ்ஜல்ஸ்) | 1984 |

தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தால் நடத்தப்படும்
மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகள்
கீழ்க்கண்ட இடங்களில் நடைபெற்றுள்ளது.

| சென்னை | திருச்சி | கோயம்புத்தூர் | மதுரை | சேலம் |
|---|---|---|---|---|
| 1979 | 1982 | 1983 | 1986 | 1987 |
| 1980 | | | | |
| 1981 | | | | |
| 1985 | | | | |



## உழைப்பின் முதற்றே உலகு

உலகம் யாவையும் உயர்த்திடும் தொழில் வளங்கள்
பலவும் பெருகிட பலன் மக்கள் துய்த்திட
நலம் மக்கள் அடைந்திட நல்லுழைப்பு நல்கி, நலிவேற்கும்
பலமிக்கச் சமுதாயம் பாரில் உழைப்பாளிகள்
உழைப்பவர் உலகம் உண்மையிது கண்டிர்,
தழைப்பவர் உழைப்பால் தனமிகுந்தேரோ !.
கொட்டியே தனத்தைக் குவித்து வைத்திடின்
குட்டியது போடுமோ ! குவலயம் மகிழுமோ?
மூச்சடக்கி மூழ்கி கடலில் முத்தெடுப்பது உழைப்பு
பேச்சினால் அதை விற்றுப்பெறும் பொருள் பெருவது பிழைப்பு.
நாச்சியர் உடலம் நனைந்திட நாற்று நடுவதுழைப்பு
ஆச்சியர் கைவளையாட அறுவடை செய்வதுழைப்பு
காசுபடைத்தோர் கள்ளச்சந்தையில் கழிபொருள் பெறுவது பிழைப்பு,
காற்றினிலே வரும் சந்தம் காதுக்கினியதன்றோ!
நெற்றி வியர்வையிலே மிளிர் நீங்கா உழைப்பதுதான்
பற்று அற்றோர்க்கும் பசிப் பிணிபோக்கும் மாமருந்து.
உற்றச் செல்வ மெல்லாம் உலகோர் உழைப்பின் முதலாலே.
தொழில் வளம் காணத் தோள் கொடுக்கும் தொழிலாளி
பசிக்கு மருந்தாம் பாவையர் பார்வையாம் போல
கசக்கி உடல் வருத்தி உரவோர் காட்டும் உழைப்பெல்லாம்
தேசப்பசிக்கு நன் மருந்தாய் திடமாய் கொண்டிடலாம்.
உலகப் பசியை உழைப்பால் போக்கும் உரவோர்
நலம் பேணி தன் உடல், நாளும் வாழ்வதில்லை
பலமிக்கச் சமுதாயம் பாரில் பசியால் வாடுவதேன்?
செலவு செய்வதில் செம்மை அறமாம் சிக்கனம் தேவையன்றோ !
செலவை என்றும் வரவுக்கேற்ப வரையறை செய்வதில்லை
'கண்டது காட்சி, கொண்டது கோலம்' எனும் கொள்கை உள்ளோர்
விண்டிலர் வாழ்வின் விடிவை வேதனை வெற்றி பெறும்.
உழைப்பவர் கைமடங்கின் உலகம் உய்த்திடுமோ?
உழைப்பும் முதலும் ஒன்றிணைவதாலே உலகம் உய்க்கிறது
உடலும் உயிரும் ஒன்றுக்கொன்று உறுதுணையாம்போல
முதலும் உழைப்பும் மூலதனங்கள் உலகு உய்வதற்கு
பிழைப்பவர்தனத்தால் பெட்டிமூடினால் பெருமை கூடிடுமோ ?
செய்யும் தொழிலே தெய்வ'மென்று தேர்ந்திடல் நலமாகும்
உய்யும் உலகம் இவ்வுண்மை உயர்ந்தால் உயர்த்திட வழியாகும்.

மா. குப்புசாமி,
நிதி அறிவுரையாளர் மற்றும் முதுநிலைக்கணக்கு அலுவலர்,
தொழிலாளர் நலவாரியம், சென்னை-6.

# "புறப்படு தோழா புறப்படு"

படைத்தவர் - திருமதி சு. ருக்மணி,
(புள்ளிவிவர ஆய்வாளர், திருச்சி)

1. புறப்படு தோழா புறப்படு
புயலெனப் பாய்ந்து புறப்படு
கோவையை நோக்கி புறப்படு
குவித்திடு பரிசினைக் குவித்திடு

2. ஆடிப்பாடி மகிழ்ந்து புறப்படு
அகம்முகம் மலர்ந்து புறப்படு
அன்புச் செல்வங்களை அழைத்திடு
அவர்களுடன் நீயும் புறப்படு

3. வாரியத்தின் விழாவிற்கு வந்திடு
வெற்றி வாகையைச் சூடிடு
என்னென்ன போட்டியென தெரிந்திடு
எல்லா போட்டியிலும் கலந்திடு

4. கால்பந்து கைப்பந்து பூப்பந்து
கயிறிழுத்தல் கபாடி பளுதூக்கல்
காளையர் சேலையர் கூட்டாக
கண்டவர் மகிழ்ந்திடும் விளையாட்டு

5. தனியே உனக்கோர் விளையாட்டு
தனித்திறன் காட்டும் விளையாட்டு
அகலம் நீளம் உயரத்தை
அனைவர் வியந்திட தாண்டிடு.

6. ஓட்டத் தொடரும் குண்டெறிதல்
கூட்டத்தில் நீயும் சேர்ந்திடு
பரிசுகள் அனைத்தையும் குவித்திடு
பார் புகழ் நீயும் வாழ்ந்திடு.

7. இத்தனை போட்டியும் உனக்குத்தான்
ஒரு பகுதி குழந்தைக்குத்தான்
கண்மணிகளுடன் பரிசினைப் பெற்றிடவே
களிப்புடன் புறப்படு கோவைக்கே.

8. வளையல் கரங்கள் கலந்திடவே
வளைபந்து என்று அங்குண்டு
இசைவுடன் கலந்திட் இசைநாற்காலி
இனிதாய் பெறுவீர் பரிசினையே.

9. மாநில போட்டியில் கலந்திடுவாய்
மாவீரனாய் நீ திகழ்ந்திடுவாய்
குறு குறுப்பான குழந்தைகளுடன்
கொஞ்சி மகிழ்ந்து களித்திடுவாய்.

10. (நல) வாரியத்தின் திட்டங்களை
வரிவரியாகப் படித்திடுவாய்
நற்பல வாரியத் திட்டங்களை
நாடே போற்றிட நல்கிடுவாய்

11. தையல் பயின்றிட பெண்களையே
தொழிலாளர் மையத்தில் சேர்த்திடுவாய்
தையல் கலையில் முதன்மை பெற்றால்
(தைக்கும்) இயந்திரம் எளிதாய் கிடைத்திடுமே

12. கொஞ்சி மகிழும் மழலைகளைக்
குழந்தை யகத்தில் சேர்த்திடுவாய்
பால், பழம், முட்டை சத்துணவும்
பயனுள்ள கல்வியும் பெறச் செய்வாய்

13. மருத்துவ சோதனை அங்குண்டு
மாதம் நான்கு முட்டையுண்டு
ஆண்டிற்கு இரண்டு சீருடைகள்
அன்புடன் என்றும் அவர்களுண்டு

14. அத்தனை அத்தனை உதவிகளும்
அள்ளித் தருவது வாரியமே
புறப்படு தோழா புறப்படு
குழந்தையைக் காப்பகத்தில் சேர்த்திடு

15. படிப்பகங்கள் என்று பலவுண்டு
படித்தால் உனக்கே பயனுண்டு
பள்ளியில் பயிலும் உன் பாலர்க்கு
புத்தக வங்கியும் அங்குண்டு

16. சுருக்கெழுத்துத் தட்டெழுத்துத் தொழிற்பயிற்சி
மருத்துவம் சட்டம் பொறியியலாம்
பட்டம் பெறவே படிக்கச் செய்வாய்
பார்புகழ் பிள்ளை வளர்த்திடுவாய்

17. இத்தனை பட்டங்கள் பெற்றிடவே
உதவித்தொகையும் உனக்குண்டு
அதிலும் உனக்கொரு வழியுண்டு
அதனைப் பெற்றால் உயர்வுண்டு

18. உழைத்துச் சலித்திடும் தோழர்க்கு
உல்லாச நாட்களை கழித்திடவே
ஓய்வு இல்லங்கள் பலவுண்டு
உற்சாகமாய் நீ தங்கிடுவாய்

19. ஜீவா இல்லம் ஒன்றுண்டு
சென்னைக்கு இதனால் சிறப்புண்டு
வாரியத்தில் வழங்கும் பயன்கண்டு
வருத்தம் மறைந்திட வாரியம்உண்டு

20. கண்ணாடியுண்டு சக்கர வண்டி உண்டு
கேட்காத காதிற்குக் கருவி உண்டு
கால் கை செயற்கை உறுப்பு உண்டு
கனிவுடன் வழங்கிட வாரியம் உண்டு

21. இத்தனை இத்தனை பயன்களையும்
இனிதாய் நீயும் பெற்றிடவே
நல நிதித் தொகையைச் செலுத்திடுவாய்
நலம் பெற விண்ணப்பம் நல்விடுவாய்

22. மாவட்ட மண்டல மாநிலத்தில்
மாவீரனாய் நீ வாழ்ந்திடவே
வாழ்க்கைத் தரத்தை உயர்த்திடவே
வருவாய் விளையாட்டு விழாவினிற்கே

23. கருத்தினில் இதனை நீ வைத்திடுவாய்
காண்பவர்க்கும் இதனை உரைத்திடுவாய்
வெற்றி வாகையும் நீ சூடிடுவாய்
வீரனாகவும் நீ விளங்கிடுவாய்

24. அத்தனை பரிசும் உந்தனுக்கே
எத்தனை மகிழ்ச்சி எங்களுக்கே
புறப்படு தோழா புறப்படு
சோலையை நோக்கி புறப்படு.

# டிக்கட் இன்றிப் பிரயாணம்

தொழிற்சங்கத்தில் அங்கத்தினராகச் சேர வேண்டும் என்ற அக்கறை தொழிலாளர்களிடையே குறைவு. அங்கத்தினர்களாகச் சேர்ந்தவர்களின் சதவிகிதம் மிகச் சொற்பமே. இதிலிருந்து சங்கத்தின் சாதனைகளில் பயன்பெருவோர் அங்கத்தினர் அல்லாதவர்களே அதிகம் என்பது தெரியவரும். சங்கத்திற்கு சந்தா செலுத்தி அதற்கு உயிரூட்டுபவர்கள் அதன் அங்கத்தினர்கள். சங்கப் பணிகளில் பங்கு பெற்று, கோரிக்கைகளைத் தயார் செய்பவர்களும் அவர்களே. பேச்சுவார்த்தை நடத்துவதும், ஒப்பந்தம் செய்வதும், தேவையானால் தொழில் கோர்ட்டுகளுக்குச் செல்வதும், தவிர்க்க இயலாத தருணங்களில் வேலை நிறுத்தம் செய்யத் தயார்படுத்துவதும் அவர்களே. நீண்ட போராட்டத்தின் இறுதியில் கோரிக்கைகளில் வெற்றி பெற்றுத் தொழிலாளர்களைப் பேணிக் காப்பதும் அவர்களே. ஆயினும் சங்கத்தின் செயல்பாடுகளில் எதுவும் பங்கு கொள்ளாமல் ஒதுங்கி இருந்து விட்டு அதனால் விளையும் பலனில் பெரும்பகுதியை அநுபவிப்பவர்கள் அங்கத்தினரல்லாதவர்களே. அவர்கள் பொருளாதார ரீதியிலோ செயல் ரீதியிலோ சங்கத்தின் செயல்பாடிகளில் பங்கு பெறுவதில்லை. இதுவும் ஒரு வகையான சுரண்டல் எனலாம். இது தொழிலாளர்களைத் தொழிலாளர்களே சுரண்டுவது போலாகும்.

டிக்கட் இல்லாமல் பயணம் செய்யும் ஒரு பயணியை இதற்கு உதாரணமாக கூறலாம் டிக்கட்டுடன் பயணம் செய்யும் பயணிகளோடு அவரும் பயணம் செய்கிறார். டிக்கட் பரிசோதகர் அவரிடம் வந்து டிக்கட் எங்கே என்று கேட்கும்போது, ''ஐயா! நீங்கள் என்ன, எனக்காகவா இந்த ரயிலை ஓட்டுகிறீர்கள்? நான் பயணம் செய்தாலும், செய்யாவிட்டாலும் இந்த ரயில் தினந்தோறும் ஓடிக்கொண்டிருக்கிறது. இதில் நான் பயணம் செய்தால் இதற்கு விசேஷமான நஷ்டம் ஏதுமில்லையே? இஃதா ஒரு மூலையில் நின்றுகொள்கிறேன். என்னை விட்டு விடுங்கள'' என்று அந்தப் பயணி கூறுவாளுனல் அது எப்படி நியாயமாகும்?

சங்கத்தில் அங்கத்தினராகச் சேராத தொழிலாளர் டிக்கட் இல்லாத பயணிபோன்றவர். 'சங்கத்தில் நான் சேர்ந்தாலும் சேராது போனலும் சங்கம் கோரிக்கைகள் வகுக்காமற் போவதில்லை. அவற்றிற்காகப் போராடாமல் இருக்கப் போவதில்லை. நிறைவேறிய கோரிக்கைகளின் பலனை நான் அநுபவிப்பதில் சங்கத்திற்கு என்ன நஷ்டம்? நான் சந்தாவாகத் தருகிற ஒரு ரூபாய் தான் சங்கத்தைத் தாங்கிவிடப் போகிறதா?'' என்று அவர் கூறினால் அது நியாயமாகாது. தொழிற்சங்கத்தை ஒரு போக்கு வண்டியாக நினைத்துவிடக் கூடாது.

டிக்கட் இல்லாமற் பயணம் செய்யும் அந்தப் பயணியைப் போல் அனைவரும் டிக்கட் எடுக்காமல் மூலையில் ஒதுங்கிக்கொண்டால் ரயில் நிர்வாகம் நடைபெறுமா? நஷ்டத்திற்குள்ளாக நேரிடும், ரயிலுக்கு வருமானம் நின்றுவிடும். இதுபோல் தொழிலாளர் ஒவ்வொருவரும் தனது சந்தா செலுத்தத் தேவையில்லை என்று நினைக்கத் தொடங்கினால் சங்கமும் இயங்கப் போவதில்லை. அது முடங்கிப் போகும். ஆகவே ஒவ்வொரு தொழிலாளரும் அங்கத்திரைாகச் சேர்ந்து டிக்கட்டுடன் பயணம் செய்யும் ரயில் பயணிகளைப்போல் தொழிற்சங்கம் என்னும் வாகனத்தில் சவாரி செய்ய வேண்டும், நம்முடைய பங்கும் இருக்கவேண்டும் என்ற தன்மான உணர்வு தொழிலாளர்கள் அனைவருக்கும் தேவை. நாம் டிக்கட் இல்லாத பயணிகளாகிவிடக் கூடாது.

நிலையத்திற்குள் ரயில் நுழையும் முன்னரே முந்திக்கொண்டு இறங்கிக் கொள்ளுகிறவர்கள் இந்த டிக்கட் இல்லாத பயணிகளே. அவர்களுக்கு அத்தனை அவசரம். இதுபோல் கோரிக்கை நிறைவேறியதும் அதன் பலனைக் கையேந்தி ஏற்று அனுபவிக்க முந்திக்கொள்கிறவர்கள். அநேகமாக சந்தா செலுத்தி அங்கத்தினராகாத தொழிலாளர்களாகவே இருப்பார்கள்.

இன்னும் ஒரு வேடிக்கை. ரயில் பயணத்தில் உள்ள வசதிக் குறைவையும், ரயில் நிர்வாகத்தின் குறையையும், ரயில் தாமதமாகச் செல்வதையும் மிகைப்படுத்தி வாய் ஓயாமல் உரக்கப் பேசிக்கொண்டு அங்கலாய்ப்பவர்களில் அநேகர் டிக்கட் வாங்காதவர்களாயிருப்பதைப் பார்க்கலாம். இதேபோல், சங்கத்தைப் பற்றிச் சிறிதும் அக்கறை இல்லாமம், சந்தா செலுத்தாத தொழிலாளர்களே சங்கத்தைக் குறைகூறுவதில் நாட்டமாயிருப்பார்கள். முயன்று சாதித்த சாதனையையும் குறைத்து மதித்துக் கிண்டல் செய்து கொண்டிருப்பவர்களும் அவர்களே. திண்ணையில் உட்கார்ந்துகொண்டு, ''பூ! இது ஒரு சாதனையா?'' என்று கிண்டல் செய்து கொண்டிருப்பார்கள். இதுபோன்ற பொறுப்பற்ற மனோபாவம் அத்தகைய தொழிலாளரை விட்டு அகல வேண்டும். சங்கத்தின் பணியிலும் பொறுப்புமனப்பான்மை வளர வேண்டும்.

ஜி. ராமானுஜம்.

# சங்கீதக் கச்சேரி

தொழிலாளர் ஒற்றுமையே தொழிற்சங்கத்தில் உயிர்நாடி. உண்மையில் ஒற்றுமையின் சின்னமாகத் தொழிற்சங்கம் இருக்கிறது. ஒற்றுமைக்குப் பங்கம் விளைவிக்கும் கருவியாக அது செயல்படக்கூடாது. தொழிற்சங்கத்தின் பெயரால் தொழிலாளர்கள் ஒருவரோடு ஒருவர் சண்டை போடுவது தொழிற்சங்க இயக்கத்திற்கே துரோகம் செய்வதாகும்.

ஒரு தொழிற்சாலையில் பல போட்டித் தொழிற்சங்கங்கள் செயல்படுவது தொழிற்சங்கத் தத்துவத்துக்கு முரணானது. ''உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள்'' என்று கோஷமிடுவதைக் கேட்கிறோம். ஆனால் நடைமுறையில் அது மாய்மாலமே. அதில் உண்மையில்லை என்பதைக் காண்கிறோம். இதனால் தொழிலாளர் சக்தி விரயமாகிறது. மாய்மாலம் நிறைந்த இந்த கோஷங்கள் ஓய்ந்து, சுயநலமுள்ள தொழிற்சங்கத் தலைவர்கள் வெளியேறினால், தொழிலாளர் ஒற்றுமை எளிதில் இயல்பாகவே ஏற்படும்.

ஒரு சிறந்த இசை நிகழ்ச்சியை நினைத்துப் பாருங்கள். நிகழ்ச்சியை அனுபவிக்கவரும் அனைவரும் இசையைக் கேட்டு மகிழ விரும்பியே வருகிறார்கள். ரசிகர்கள் அமைதி காத்தாலன்றி இசைகேட்டு மகிழ இயலாது. பாடுபவர் தவிர மற்ற அனைவரும் மௌனமாக இருந்தால்தான் சங்கீதத்தை ரசிக்க முடியும். எனவே அங்கே மௌனம், அமைதி அவசியம். அதற்காக, ஒருவர் எழுந்து நின்று ''சத்தம் போடாதே'' என்று ஓயாது கத்திக் கொண்டிருந்தால் எவ்வாறு இசையைக் கேட்டு ரசிக்க முடியும்? முதலில் ''அமைதி'' கோரு குரல் அமைதி பெற வேண்டும். அப்போதுதான் அனைவரும் இசை கேட்டு அனுபவித்து மகிழ முடியும்.

இதுபோல் தொழிலாளர் ஒற்றுமை என்ற பெயரால் தலைவர்கள் மேடைகளை அமைத்துக் கொண்டு கோஷங்களை எழுப்பிக் கூச்சலிடுவதை நிறுத்தினாலே போதும். அதுவே தொழிலாளர் ஒற்றுமைக்கு அவர்கள் செய்யும் பெரிய சேவையாகும். உரக்கக் கோஷம் எழுப்புகிறவர்கள் அநேகமாகத் தாங்கள் இன்னது செய்கிறோம் என்பதை அறியாமலே கூச்சலிடுகிறார்கள். ஓசை குறைவாக எழுப்பும் நாணயம் எப்படிச் செல்லாத கள்ள நாணயம் என்பதை நாம் அறிவோமோ, அதேபோல் ஓசை அதிகமாக எழுப்பும் நாணயமும் கள்ள நாணயமே. ஆகவே அதை வெளியில் புழங்கவிடக் கூடாது. தொழிலாளர் ஒற்றுமைக்கு உலைவைக்கும் கூச்சலிடுபவர்கள் முதலில் அகற்றப்படவேண்டும். அப்பொழுதான் தொழிலாளரிடையே ஒற்றுமை ஏற்படும்.

**ஜி. ராமானுஜம்.**

# வெளியார் தலைமை

இந்தியாவில் பெரும்பாலும் வெளியார் உதவிகொண்டே தொழிற்சங்க இயக்கம் தோன்றி வளர்ந்து வந்திருக்கிறது. அவ்வாறு தலைமை தாங்கியவர்கள் சமுதாயப் பணிக்காகத் தங்களை அர்ப்பணித்துக் கொண்டவர்களாவர். ஆகவே அவர்கள் தொழிலாளர் நம்பிக்கைக்குப் பாத்திரமாக இருந்தனர். அவர்கள் தொழிலாளர் உரிமைக்காகப் போராடி அவர்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தப் பாடுபட்டனர்.

ஆரம்பகாலத்தில் தொழில்களில் ஈடுபட்டிருந்த ஊழியர்கள் பெரும்பாலும் கல்வி அறிவில்லாதவர்களாக இருந்தனர். தொழிலதிபர்களும் குறுகிய கண்ணோட்டமுள்ளவர்களாயிருந்தனர். தொழிலாளர்களைப் பழி வாங்கும் போக்கு மிஞ்சியிருந்தது. இந்நிலையில் வெளியார் தலைமை தேவைப்பட்டது. தொழிலதிபரும், தொழிலாளியும் நேருக்குநேர் சமமாக இருந்து பேச்சு வார்த்தை நடத்துவது அன்று சாத்தியமில்லாதிருந்தது. அதனாலும் வெளியார் தலைமை தேவைப்பட்டது.

1926-ம் ஆண்டில் நிறைவேறிய தொழிற்சங்க சட்டத்தின்படி தொழிற்சங்கத்தின் நிர்வாகக் குழுவில் 50 சதவிகிதம் வரை வெளியார் பதவி வகிக்க அனுமதி வழங்கப்பட்டிருந்தது. இந்த சதவீதம் நாளாவட்டத்தில் படிப்படியாகக் குறைக்கப்பட்டு இப்பொழுது நான்கில் ஒரு பங்கினர் வெளியார் அங்கம் வகிக்க வாய்ப்பளிக்கப்படுகிறது.

எனினும் தொழிற்சங்க இயக்கத்தில் தொடர்ச்சியாக வெளியார் தலைமை நீடிப்பது உசிதமல்ல. அவர்கள் மூலம் தொழிற்சங்க இயக்கத்திற்கு ஒவ்வாத பல வெளி விவகாரங்களும் இதனால் நுழைய இடமேற்படுகிறது. சில வேளைகளில் அவர்கள் சுயநலவாதியாக மாறவும் வாய்ப்புண்டு. தலைமையைத் தக்கவைத்துக்கொள்ள அவர்கள் தவறான வழிமுறைகளைக் கையாளவும் கூடும்?

இன்று தொழிலாளரிடையே கல்வித்தரம் கணிசமாகக் கூடியுள்ளது. படித்த இளைஞர்கள் பலர் தொழிலாளர்களாக உள்ளனர். தொழிற்சங்கத் தலைமை வகிக்கவும் தொழிற்சங்கத்தை நிர்வகிக்கவும் அவர்களால் இயலும். ஆகவே இன்று தொழிற்சங்கங்களை தொழிலாளர்களாலேயே நடத்த முடியும் என்ற நிலை உருவாகியுள்ளது. இந்நிலை வரவேற்கத்தக்கது, மகிழ்ச்சிக்குரியது.

வெளியார் தலைமைக்கும் ஒரு பொறுப்புண்டு தொழிலாளர் மத்தியிலேயே தலைமை தாங்குவதற்கான பயிற்சி அளிக்கும் பொறுப்பினை அவர்கள் ஏற்கலாம். இதன் மூலம் படிப்படியாக வெளியார் தலையீட்டினைக் குறைத்துக்கொள்ள முடியும். அதற்குத் தற்போதுள்ள வெளித் தலைமை உதவவேண்டும். ஆனால் அநேக சமயங்களில் தொழிலாளர் ஒருவர் தொழிற்சங்கத் தலைவராகத் தலைதூக்குவதை வெளியார் விரும்பாதிருப்பதையும் பார்க்கிறோம். இதன் காரணமாக, தொழிற்சங்கத்திற்குள் தலைமைப் பதவிக்குக் கடுமையான போட்டி எழு

கிறது. உண்மையில் வெளியார் ஒருவருக்கு அவ்வாறு போட்டியிவததற்கு உரிமையில்லை. தொழிலாளர்கள் கூடித் தங்கள் தலைவரைத் தேர்ந்தெடுக்கும் உரிமையில் வெளியார் எவரும் குறுக்கிடக் கூடாது. தங்கள் தலைவர் தங்களில் ஒருவராக இருக்க வேண்டுமா, அல்லது வெளியார் ஒருவராக இருக்க வேண்டுமா என்று தீர்மானிப்பது தொழிலாளர்களின் விருப்பத்தைப் பொறுத்தது. இதில் யார் தலையீடும் கூடாது.

இப்பிரச்சனையைக் கூர்ந்து பார்ப்போமானால், தலைவர் வெளியாரா, தொழிலாளரா என்பதைவிட, தலைமை தாங்குவதற்கு அவர் தக்கவரா, அல்லாதவரா என்பதுதான் முக்கியம். எங்கெங்கு தொழிலாளரே தலைமை தாங்கும் தகுதியும் வாய்ப்பும் இருக்கிறதோ, அங்கு வெளியார் அதற்கு மனப்பூர்வமாக இடமளித்து விலகிக் கொள்ள வேண்டும். அதுவே அவர்கள் தொழிற்சங்க இயக்கத்திற்குச் செய்யும் பெரும் சேவை. தங்கள் தலைமையைத் தக்க வைத்றுக் கொள்வதற்காக தொழிற்சங்கம் பிளவுபட அவர்கள் காரணமாகி விடக்கூடாது. தொழிலாளர் ஒருவர் தலைமை தாங்குவதில் குறை காணப்பட்டால் அவருக்குப் பயிற்சி அளிக்கும் வழிகாட்டிகளாக வெளியார் பங்கேற்கலாம். தொழிலாளர்கள் மத்தியிலேயே தொழிற்சங்கத் தலைவர்கள் உருவாக உதவுவதே வெளியார் தலைமையின் முக்கிய நோக்கமாக அமைய வேண்டும்.

புதுப் புது தொழிற்சங்கங்கள் முளைக்கின்றனவே, ஏன்? என்பதை உற்றுப் பார்ப்போமானால் அங்கு அநேகமாக வெளியார் தலையீடுதான் காரணமாக இருக்கும். தொழிற்சங்கத்திற்குத் தலைவர் தேவை என்ற நிலைமை மாறி, தலைவருக்கு ஒரு சங்கம் தேவை என்ற நிலை உருவாவதற்கு அநேகமாக வெளியார்களே காரணம். வெளியார் தலைவராவதை நிர்வாகக் குழுவில் இரண்டில் ஒரு பங்கிற்குக் குறைத்து விடுவதால் பெரிதும் முன்னேற்றம் காண முடியாது. வெளியார் ஒருவர், இருந்தாலே போதும் தொழிற்சங்கம் பிளவுபடுவதற்கு.

வெளியார் தலமை சிறந்ததாக இருந்தால்கூட, அது நீண்டகாலம் தொடர்ந்திருக்கக் கூடாது. அவரை விட்டால் வேறு ஆள் இல்லை என்ற நிலை நீடித்தால் அத்தலமையில் ஏதோ கோளாறு இருக்கிறது என்று பொருள். சிறந்த தலைவர் ஒருவர் தலைமை தாங்கும் பயிற்சியை மற்றவர்களுக்கு அளிப்பார். தம்மையே நம்பி இருக்கும் அபலைகளாகத் தொழிலாளர்களை ஆக்கிவிடமாட்டார். தலமை தாங்கும் பயிற்சியினை அவர்களுக்கு அளித்துப் பொறுப்பினை அவர்களிடம் ஒப்புவித்துத் தம்மை விடுவித்துக்கொள்ளுவதில் ஆர்வமுள்ளவர்களாக வெளியார் தலமை அமையவேண்டும். அவ்வாறு விடுதலை பெறுவது பெயரளவில் இருக்கக் கூடாது. ஒரு தொழிலாளரைத் தலைவராக்கி அவரை பிடிக்குள் வைத்துக்கொண்டு ஆதிக்கம் செலுத்தும் வெளியாரும் உண்டு. அதுவும் சரியல்ல. பொறுப்பினை ஒப்படைத்து விளகிக் கொள்ளுவது என்பது உள்ளார்ந்த உண்மையாயிருக்க வேண்டும். அப்பொழுதுதான் தொழிலாளருக்குத் தலமை தாங்கும் ஆற்றலை வளர்ப்பது என்பது உண்மையாக இருக்கும். தொழிற்சங்க இயக்கம், தொழிலாளர்களாலேயே நடத்தப்படுவதாயும் இருக்கும்.

**ஜி. ராமானுஜம்.**


**With the best compliments**

**of**

**A Well Wisher**

*With best compliments from :*

**RAM & RAM**

*INDIANOIL DEALERS*

*110, ALAGARKOIL ROAD,*

*MADURAI - 2.*

WITH BEST COMPLIMENTS

FROM

# ROOPAM

**Exclusive Show Room**
**of**
**Readymade Garments**

35, VENGALAKADAI STREET,
MADURAI-625 001.
Phone : 2 7 2 7 1.

**With best compliments from :**

# CHAMUNDI SUPER MARKET

***Four Roads,***
***SALEM-7.***

**With best compliments from :**

*Do you know?*
*We have been selling*
*Silk Sarees and Garments*
*Since your Great*
*Grand Mother was*
*a young girl!*

# MISS INDIA

*(Exclusive Sarees for Exclusive Women)*

**14, North Chitrai Street,**
**MADURAI - 625 001.**
*Phone : 3 7 7 4 2.*

*With best compliments from :*

*Grams : OREMECH*

*Phone : 6 9 4 5 5*
*6 7 4 5 5*

# R. M. H. CORPORATION [Salem]

*P. B. No. 116,*

*91, ARUNACHALA ASARI STREET,*
*SALEM - 636 001.*

With best compliments from :

**STATE MEDICALS**

95, EAST AVANIMOOLA STREET,

MADURAI - 625 001.

*Chemist & Druggist,*

*Wholesale & Retail.*

மதுரையில் ஏர்கண்டிசன்

வசதியுடன் தங்குவதற்கு சிறந்த

இடம்

**“ஹோட்டல் ஆர்த்தி”**

9, பெருமாள் கோவில் மேல மாடவீதி.

மதுரை.

போன் : 31571 (6 Lines)

33345

WITH BEST COMPLIMENTS

FROM

**WELL WISHERS**

With best compliments from

**TVS**

"WISHING THE SPORTS MEET ALL SUCCESS"

**SRICHAKRA TYRES LIMITED**

MADURAI.

WITH BEST COMPLIMENTS FROM

**S. K. MYLSAMY GOUNDER**

*Managing Director*

## SKM'S Energy Animal Feeds Private Ltd.,

ADMINISTRATIVE OFFICE :

**49/C, Gandhiji Road,**

**Post Box No. 415, Erode-638 002.**

**Periyar District. Tamil Nadu.**

Phone : 75214, 75215, 75216 } PBX

Grams : 'POULTRY' ERODE

Telex : 0856-226 SKM IN

WITH BEST COMPLIMENTS FROM

## Nagalakshmi Flour Mills Private Limited

**DINDIGUL**

*Manufacturers and suppliers of*

**'Special' Quality Wheat Products under their famous**

**"AMMAN" Brand Maida**

*Registered Office :*
Mills & Sales Department,
No. 1, Tiruchy Road,
DINDIGUL 624 009
PHONE : 4572
TELEX : 440 217 NFM IN

*Principal Office :*
37, Suryanarayana Street,
Madras-600 081
PHONE : 552672
TELEX : 041 6179 NFM IN

GRAM : FLOURMILL

## TAMIL NADU STEELS LIMITED

**Subsidiary of Tamil Nadu Industrial Development Corporation Ltd.,**

(A GOVERNMENT OF TAMIL NADU ENTERPRISE)

ARAKKONAM-631 004

Manufacturers of Construction Steel Twisted and Plain Rounds
Conforming to ISI Specifications and Special Grade
Medium and Low Carbon Steel
Shifted Its Commercial Manager's Office to Madras,
All Commercial Enquiries May Please be sent to the
Following Address :

COMMERCIAL MANAGER
**TAMIL NADU STEELS LTD**
**6-A WALLACE GARDEN**
**THIRD STREET**
**NUNGAMBAKKAM**
**MADRAS-600 006.**

## Indian Commerce & Industries Co. P. Ltd.

STRUCTURAL CONSTRUCTORS — MECHANICAL CONSULTANTS — FOUNDRYMEN EXPORTERS

*Regd. & Head Office :*

**Beehive Buildings 29, Broadway, Madras-600 108.**

Cable :
LUCKY, MADRAS
BEEHIVE, MADRAS

Phone : 512221
512622

Telex :
041-7114 ICOMIN

*Works :*
BEEHIVE FOUNDRY
ENGINEERING WORKS
29, Broadway, Madras-600 108
Kowtha Steel Products
Ramavarappadu
Krishna Dist A. P.

*Offices :*
KOWTHA BUILDINGS
Buckinghampet
VIJAYAWADA-520 032
Kowtha Swaarajya Vihar,
10 Padmanagar
Secunderabad-500 025

KWALITY YARN

With best compliments

KARUR MILLS LIMITED

THANTHONIMALAI PO., KARUR-639 005.

COUNTS : 20s PR 60s DHPR HANK
2/20s and 2/60s DHPR
20s and 60s CONE

Telex : 456-SAGR IN
Grams : MAHODADHI
Telephone : 21110 & 20162

The Vijayakumar Mills Limited

KALAYAMPUTHUR - 624615 PALANI

Telephone : 591 (5) Lines)
Telegrams : "VIJAKUMAR"

HOSIERY YARN : Combed - 34s ISI - COLTS - SILVER
40s ISI - COLTS
40s - COLTS - GOLD

GASSED, MERCERISED YARN : Combed - 2/65s, 2/80s and 2/100s
MERCERISED YARN Combed - 2/64s, 2/100s; 2/120s
Both Gray & Bleached

SEWING THREAD YARN IN HANKS : 2/36s; 3/50s

COLTS
A VIBRANT RANGE OF
VESTS AND BRIEFS
&
COLTS
COTTON SEWING THREAD
IN ALL RANGES



# TEXTILE INDUSTRY IN TAMIL NADU

By Mr. G. Devarajan, Chairman,
Southern India Mills' Assn,
Coimbatore.

The textile industry in Tamil Nadu occupies the premier position among all industries. Aside from being the forerunner for the industrial development of the State, this industry continues to contribute significantly to the economy of Tamil Nadu. Its premier position can be gauged from the following :

Of the 1031 textile mills in the country today, Tamil Nadu accounts for 439 mills. These mills together produce 402 million kgs. out of 1448 million kgs of annual yarn output in the country or, 27% of the total production. In value terms, the yarn produced by the mills in Tamil Nadu would be Rs. 1587 crores. The industry provides direct employment to nearly 2 lakh workers and indirect employment to thousands of others-weavers in handlooms and powerlooms, hosiery as well as those employed in industries ancillary to textile industry. This industry also contributes significantly to the central and State exchequers by way of excise duty and sales-tax Rs. 104 crores by way of excise and Rs. 38 crores by way of sales-tax. Of late, the textile mills in the State have also been earning valuable foreign exchange by way of cotton yarn exports which is estimated to be of the order of Rs. 115 crores in 1 87.

One peculiar feature of the textile industry in Tamil Nadu is that it is predominantly spinning oriented, and that too of cotton spinning. Of the 748 spinning mills in the country, Tamil Nadu has 416 spinning mills. No other State in India has such a concentration of textile mills.

The textile mills in Tamil Nadu together consume about 27 laks bales of cotton every year. Against this, the State produces only 6 laks bales of cotton. The mills are, therefore, obliged to buy cotton from States as far away as Punjab, which in turn, necessitates additional cost on transportation. Similarly, of the total yarn produced by the mills, only 60% is consumed within the State, the rest being sold in upcountry markets adding to the cost of transportation to the mills.

In the case of man-made fibres, the situation is still worse in that almost all the indigenous manufacturers of man-made fibre are in the North which entails additional cost to the mills on transportation of the fibre.

For many, it may be a surprise to know that the Tamil Nadu Textile worker is the highest paid in the country today. While the Coimbatore textile worker is paid Rs. 1405 a month, the wages of a worker in Kerala is Rs. 1134, in Bombay Rs. 1227, Karnataka Rs 1097, Ahmedabad Rs. 1107, Andhra Pradesh Rs. 1047, and West Bengal Rs. 992.

Power cuts have become a regular feature over the past few years compelling mills to generate their own power at a cost two times the grid power.

The textile industry in Tamil Nadu is known for its most efficient working. Almost all the mills work throughout the year-356 days, seven days a week, 24 hours/day. The mills in this region can also boast of having the highest machine speeds, particularly in ring spinning in the world. Also, compared to other industries in the organised sector, the textile industry here has the lowest overhead expenses.

Inspite of all the disadvantages, such as high wages, powercuts, higher excise and sales taxes, high transportation cost for raw materials and finished products, the textile industry in Tamil Nadu has been able to survive mainly because of the managerial efficiency.




With best compliments from

**VELWYN TELEVISION LIMITED**

Manufacturer of . DYANORA TELEVISION RECEIVER SETS AND TWO-IN-ONE

4, PADMANABHA NAGAR, ADYAR,
MADRAS-600 020



With best compliments from

***HOTEL MARIS***

9, CATHEDRAL ROAD,
MADRAS-600 086

Phone : 4 7 0 5 4 1 (10 Lines)
Grams : HOTEL MARIS

Telex : 041-6380
MARS IN

786

தொழிலாளர் நல விளையாட்டுப் போட்டிகள்
சிறப்பாக நடைபெற எமது இனிய வாழ்த்துக்கள் !

தரமானது ! தன்னிகரற்றது ! !

**"நிஜாம் லேடி"**

**ஸ்பெஷல் புகையிலை**

எமது வாசனை பன்னீர் புகையிலையையும்,
வாசனை புகையிலையையும் கேட்டு வாங்கி போட்டு மகிழ்வீர் !

தயாரிப்பாளர்கள்

**ஹாஜி ஏ. எம். அப்துல் ரஹிமான்**
**ராவுத்தர் & கோ.,**

தபால் பெட்டி எண். 4, பழைய அரண்மனை,
புதுக்கோட்டை - 622001.

எமது இனிய நல்வாழ்த்துக்கள்

**போயிலகடா பிஸரீஸ் [பி] லிட்.,**

நாகாச்சி, உச்சப்புளி,
ராமநாதபுரம், மாவட்டம்.

**அரசி வழங்கும் முத்தான மூன்று திட்டங்கள்**

வைப்பு நிதிக்கு வட்டி அதிகம் தரும் எமது நிறுவனம் !
வளமிக்க வாழ்வுக்கு வருவீர் இக்கணம் !

நான்கு வருடங்களில் **"இரட்டிப்புத்தொகை"**
ரூ. 6250 செலுத்தி பெற்றிடுவீர் 2 லட்சம்
ஒருவருட டெபாசிட்டுக்கு 18% வட்டி
கால் டெபாசிட்டுக்கு (Call Deposit) 12% வட்டி

மைய அரசின் சீட்டு விதிகளின்படி தொடர்ந்து ரூ. 10000/- முதல்
ரூ. 200000/- வரை சீட்டுகள் நடைபெறுகிறது.

ஆபீஸ் : 20919
23919

வீடு . 20934
23934

**அரசி பைனான்ஸ் கார்ப்பரேஷன்**

99, ராஜாஜி தெரு,
கரூர் - 639001, திருச்சி மாவட்டம்.

தந்தி : சுலைமான்

தொலைபேசி : தொழிற்சாலை — 2384
வீடு — 2424

இயற்கை காரம், தரத்தின் மேன்மை
எல்லோரும் விரும்பி கேட்டு வாங்கி சுவைப்பது

**சுலைமான்**

**ஸ்பெஷல் புகையிலை**

தயாரிப்பாளர்கள் :

**S. M. முகம்மது இப்ராகீம் & கோ**

த. பெ. எண் - 46
புதுக்கோட்டை - 622001

Telegrams : TRIDISTIL
Telex : 045-234

Telephone : 23361
23362

**With best compliments from**

**TRICHY DISTILLERIES & CHEMICALS LTD.**

Factory :
Senthannipuram
Tiruchirapalli-4

Registered Office :
109, Nungambakkam High Road,
Post Box No 3327
Madras-600 034.
Telephone : 86001 (3 Lines)
Telex : 041-7180 (TDCL-IN)
Telegram : FINE DISTIL

Manufacturing :
RECTIFIED SPIRIT
ACETALDEHYDE
ACETIC ACID
CARBON-DI-OXIDE GAS ETC.



**With best compliments from**

ELCOT

**COMMUNICATION DIVISION**

WE MANUFACTURE AND SUPPLY
VHF/UHF WIRELESS EQUIPMENTS & SYSTEMS

**Electronics Corporation of Tamilnadu Ltd.**
(A Govt. of Tamilnadu Enterprise)
COMMUNICATION DIVISION
**Plot No. 11 to 15, 22 to 26**
**DEVELOPED PLOTS INDUSTRIAL ESTATE,**
**PERUNGUDI, MADRAS-600 096**


# வேண்டும், வேண்டும் !

குன்றென நிற்றல் வேண்டும்
குடைஎனப் பணிதல் வேண்டும்
மன்றினில் உயர்தல் வேண்டும்
மனதினில் அமைதி வேண்டும் ;
நன்றென நினைப்ப தெல்லாம்
நடத்திடும் துணிவு வேண்டும்
அன்றெனில் உலகை விட்டே
அக்கணம் அகல்தல் வேண்டும் !

முறையுள செல்வம் வேண்டும்
முனிவிலா நண்பர் வேண்டும்
நிறையுள மனையாள் வேண்டும்
நிகரிலாக் குழந்தை வேண்டும் ;
கறையிலாப் புகழும் வேண்டும்
கலக்கமிலா உடலும் வேண்டும்,
பெறும்இவை இல்லை என்றால்
பேருல கடைதல் வேண்டும் !

காலையில் படுக்கை விட்டு
கண்விழித் தெழும் நேரத்தில்
சோலையின் மலரைப் போல
தூயதோர் மனமும் வேண்டும் ;
மாலையில் தென்றல் வந்தால்
மயங்கிடும் உடலும் வேண்டும் ;
ஏலுமிவ் வாழ்க்கை இன்றேல்
இறைவினை அடைதல் வேண்டும் !

யந்திர மனிதன் போல
அடிகளை எடுத்து வைத்து
மந்திரம் படித்தாற் போல
மனதினுள் முணு முணுத்தது
சந்தன மரத்தைப் போல
தான்தேய்ந்து பிறர்க்குத் தந்து
வெந்துபோய் அழிவ தென்றால்,
வீணான பிறப்பே யன்றோ !

'தோன்றுக புகழோ' டென்று
சொன்னது தமிழ்நூல் அன்று !
'ஆன்றவன் அறிஞன்' என்று
அனைவரும் போற்று மாறும்
ஈன்றவர் மகிழு மாறும்
இனியதோர் வாழ்வைக் கேட்டேன் ;
சான்றென நிற்கும் தெய்வம்
இனிமேலும் தருதல் வேண்டும் !

-கவிஞர் கண்ணதாசன்-



# "பசி"

(இது கவிதையல்ல — ஒரு கனவு)

**ஆ. பாஸ்கரதாசன்,** பி. ஏ.,

தொழிலாளர் துறை உதவி ஆணையர் (சமரசம்) 2,
கோவை — 2

*பாடாத தேனி உலவாத் தென்றல்*
*பசியாத நல்வயிறு — பார்த்ததுண்டா? — எனப்*
*பாவேந்தர் — வினாத்தொடுத்தால் — உலகை நோக்கிட*
*பாமரனும் சிந்திக்க கருக்கொடுத்தார்......*

*இன்மையிலும் இன்னாதது யாதெனில் — இன்மையின்*
*இன்மையே — இன்னாதது — எனச் செந்நாப் புலவன்*
*செவிக்குணவுதந்தான் மனிதக் கூட்டம்*
*சிந்திக்க வழியும் சொன்னான் — மேலும்*

*இரந்து தான் — பசி போக்க வேண்டுமென்றால்*
*பரந்து கெடுக உலகியற்றியான் — எனப்*
*படைத்தவனைச் சாடினான் — பல்லுயிரும் ஓம்பக்*
*கிடைத்தது தான் அறம் எனப் பேசினான்...*

*தத்துவங்கள் — தர்மநெறி சாத்திரங்கள் — அத்தனையும்*
*மொத்தமாய் உரைப்பதென்ன? — சமுகத்தில்*
*முட்புதராய் உறுத்துகின்ற முடிவற்ற நீள்பசியை — வேர்*
*கொள்ளாமல் நீக்குவதேயல்லால்...*

*மனிதனுக்குப் பல குணமுண்டு — அது போல்*
*பசிகளிலே பல வகையுண்டு...*
*அறிஞனுக்கு பசி வந்தால் — இலக்கியத்தில்*
*ஆற்றல் மிக்க படைப்புகள் உலவவரும்...*
*கவிஞனுக்குப் பசி வந்தால் — கற்பனைகள்*
*கவிதைகளாய் நடைபயிலும் — சிறந்த*
*கலைஞனுக்குப் பசி வந்தால் — காணும் காட்சி*
*காவியமாய், ஓவியமாய், நடிப்பாய் மாறும்.*

*ஆண்மைக்குப் பசி வந்தால் பெண்மை சாயும் — நச்சு*
*அரவுக்குப் பசி என்றால் இரையே போதும்*
*பெண்மைக்குப் பசி என்றால் கற்பு தேயும்*
*பேராசைக்குப் பசி என்றால் வாழ்வே மாயும்.*

*பூந்தென்றல் சீற்றம் கொண்டு — புயலாய் மாறும்*
*பொன்மாரி சினம் கொண்டால் — கொடுமழையே ஆகும்*
*மண் மாரிமேவும் — மண் குடிசை சாயும்*
*மரம் வீழும்; கால்நடைகள் சாகும் — மற்றும்*
*ஆழ்கடலும் ஆர்த்தெழுந்து — நிலமகளைக் கவ்வி*
*அரித்து விடும் — பூமிதனை — இயற்கை பசி கொண்டால்!*

மன்பதையை வாழ்விக்க வந்த வறுமை மிகு திருக்கூட்டம்
மானிடத்தில் வலிவற்ற ஓர்பகுதி — இதில்
பற்றிக் கொண்டு விட்டகலா — ''பசி''ப் பிணியால்
பாரினுக்கு ஏது தொல்லை......?

மன்பதையில் ஒருக் கூட்டம்
மானமுள்ள திருக்கூட்டம் — வாழ்வில்
நம்பிக்கை என்ற நடைபாதை நோக்கி
வெம்புகின்ற மனத்தோடு
வேதனையைத் துணைக்கழைத்து
துன்பத்தைச் சொல்லவொணா துயரத்தை
என்பு தோல் போர்த்திய
எளிய உடல் தாங்கி நிற்கும்
அன்பு மனம் தனில் சுமந்து
வறுமையென்ற நோய்க் ''கிருமி'' — நாளும்
வளர்க்கின்ற வயிற்றுப் பசி போக்க
நீள் பயணம் தொடங்கி விட்டார்
நிலையற்ற வாழ்வுதனில்......

மண் மேடை மலர் மஞ்சம்
வானம் தான் கூரை
உழைப்பதுவும் உண்பதுவும்
உருக்குலைந்த சமுகத்தை உயர்த்துவதும்
அவர் வேலை — ஆனால்
தனக்கென்று கொண்டதுவோ
மனந்துளைக்கும் அலைக்கழிக்கும்
உருக்குலைக்கும் உறுபசியே!

வளர்ந்து விட்ட விஞ்ஞானத்தால் யாது பயன்
வான் முட்டும் சாதனைகள் யாருக்காக!
வண் மேகம் திரண்டெழுந்து — வானம் கருக்கொண்டால்
கண் சிமிட்டும் நேரத்தில்
கழனி வேலை செய்து — களிப்புறும்
வெள்ளை மன விவசாயி வீட்டில்
வீற்றிருக்கும் பசிப்பிணிக்கு
விடை கண்டோமா?

கல் லுடைக்கும் தொழிலாளி — கனியில்
தூங்கும் பொன்னெடுக்கும் — புதுப்புது
உலோகம் தோண்டும் — வன் தொழிலில்
ஆலையில் வளர் தொழிற்சாலையில் — ஆயுதக்கிடங்கில்
மானிடத்தின் அடித்தளத்தில் — ''இல்லாமை''
என்ற சொல்லை — என்றும் மூலதனமாக்கிக் கொண்ட
பல்கோடி மாந்தர்களின் — படு வயிற்றில்
வில்லாகத் துளைக்கின்ற — வீண் பசியைப் போக்கி
சொல்லாள வந்த சோம்பேறிகள் மலிந்த — நாட்டில்
வல்லாளன் பிறந்தானா? நல்வாழ்வுதனை தந்தானா!

**படைப்பு ஆ. பாஸ்கரதாசன்**



## கோவை கே. ராமராஜ்

செயலாளர்

இந்திய தேசிய தொழிற்சங்க காங்கிரஸ்

இம்மாதம், ஜூன் 30-ம் நாள் முதல் ஜூலை 2-ந் நாள் வரை கோவையில் தொழிலாளர் நல வாரியம் நடத்தும் விளையாட்டு விழாவில் கலந்து கொள்ளும் தொழிலாள சகோதர, சகோதரிகளுக்கு இந்திய தேசிய தொழிற்சங்க காங்கிரஸ் **(INTUC)** யின் மனப்பூர்வமான வாழ்த்துக்கள்.

உழைப்பாளிகள் உடல் நலத்தோடு வாழ்ந்தால் தான் எதிர்காலத்தில் நாட்டைக்காக்கும் வீரர்கள், விவேகிகள், விஞ்ஞானிகள், தொழிற் நுட்பம் கொண்ட இளைஞர்களை உருவாக்க முடியும் என்ற சமுதாய நல உணர்வுகளை தொழிலாளர்கள் பெற்றிருக்க வேண்டும்.

நாட்டுணர்வு மிக்க தொழிலாளர்களால் தான் நாடு முன்னேற முடியும், தொழிலாளர்களால் தான் உலகம் இயங்குகிறது. அவன் இன்றி அணுவும் அசையாது.

அணுவைப்பிளந்து ஏழுகடலைப் புகட்டுகின்ற ஆற்றல் மிக்கவனும் தொழிலாளியே.

அவன் உடல் நலத்தோடு, ஆரோக்கியமிக்க, சிறந்த குடும்பத்தலைவனாக வாழவேண்டும் என்ற சீரிய குறிக்கோளுடன் நடத்தப்படுவது தான் தொழிலாளர் நல வாரியத்தின் விளையாட்டு விழாவாகும்.

தொழிலாளர் துறை நல அதிகாரிகளை நாம் எவ்வளவு பாராட்டினாலும் தகும்

''இரும்பைக்காய்ச்சி உருக்கிடுவீரே,
யந்திரங்கள் செய்திடுவீரே — (பாரதி)

கனயந்திரத் தொழில்களின் முதல்தர முக்கியத்தை உணர்ந்த முன்னாள் பாரதப்பிரதமர் நேருஜி அவர்கள் ரூர்கேலா, பிலாய், துர்க்காபூர் போன்ற உருக்கி உற்பத்தித் தொழிற்சாலைகளை நிறுவி, நாடு பூராவும் புதியபுதிய தொழிற்சாலைகள் ஏற்படுத்தினார்.

நமது நாடே தொழில் மயமானது!

வெள்ளிப்பனி மீலைமீதுலாவி, மேலைக்கடல் முழுவதும் கப்பல் விட்டு பள்ளித்தல மனைத்தையும் கோவில் செய்வதிலிருந்து, ஆயுதம், செய்வது, ஆலைகள் வைப்பது, உள்ளடக்கி குடைகள், உழுதுபடைகள், கோணிகள் இரும்பாணிகள் செய்வதோடு, நடையும் பரப்பும் வண்டிகளையும் ஞானம் நடுங்க வரும் கப்பல்களையும் செய்வதோடு, உழவுத் தொழில்கள் அனைத்தையும் உவந்து செய்யும் படி, ஊக்குவித்து, நமது தேசிய வாழ்வு செழிக்க, உழைக்கும் தொழிலாளர்களையே நமது தேசியகவி சுப்பிரமணிய பாரதியும் நம்பினார்.

ஆண்டவன் படைப்பில் உயர்ந்த படைப்பான தொழிலாளர்கள் எக் காரணத்தைக் கொண்டும் மது அருந்தும் பழக்கத்திற்கு அடிமையாகக் கூடாது.

மனிதனை, மற்ற விலங்குகளிலிருந்து வேறுபடுத்துவது அவனது அறிவே யாகும்.

மனம்போன போக்கில் அதைச் செலவிடாமல், தீயவை நீக்கி, நல்வழியில் மனதைச் செலுத்துவது தான் அறிவு என்கிறார். திருவள்ளுவர்,

''சென்ற இடத்தால் செலவிடாது தீது ஒரீஇ
நன்றின்பால் உய்ப்பது அறிவு'' (குறள்)

தொழிலாளர்கள், விளையாட்டுப் போன்ற நல்வழியில் மனத்தைச் செலுத்துவது எதிர்கால நமது சமுதாய வளர்ச்சிக்கு அடித்தளமாகும்.

நல்லது எது? தீயது எது? என்ற பகுத்தறிவினையே குறிப்பிடுகிறேன்.

தீமை என்று உணர்ந்தும் நமது உடன் பிறப்புக்கள் மது மயக்கத்திற்கு அடிமையாக உள்ளதை நாம் பார்க்கிறோம்.

இதனைத்தான் காந்திஜி

**"The drunkard forfeits his sanity, he has even been known to forget the distinction — between Mother, wife and daughter.**

**His life becomes a mere burden to him. Drunkard's have often been found lying in drains and Gutters.**

**Even men of sound sense become helpless automators when they take to drink; even when not actually under its influence, their minds are too impotent to do any work"**

மது அருந்தும் பழக்கத்துக்கு அடிமையானவன், கூரிய மதிபடைத்தவனாக இருந்தாலும் நிலை தடுமாறிவிடுவான்.
அறிவுதான் மனிதனை விலங்கிலிருந்து வேறுபடுத்துகிறது.

எனவே, மதுவினை உண்ணவேண்டாம், அவ்வாறு நீங்கள் மது உண்டால், உங்களைச் சான்றோர்கள் மதிக்கமாட்டார்கள்.

மது உண்டு மயங்கும் ஒருவனை ஈன்றெடுத்ததாயே, பாசத்தின் உறைவிடமான தாயே வெறுக்கிறாள். குடிப்பவனை மனைவியும் வெறுக்கிறாள், நீங்கள் பெற்ற பிள்ளைகளும் மதிக்க மாட்டார்கள்.

மதுவுக்கு அடிமையானவன், பழிக்குப்பயப்படாமல், தீதிற்கு அஞ்சாது, கொலைக்குக்கூசாது, இழிச்செயல்கள் செய்து, நாணம் சிறிதுமின்றி அலைவதை இன்று பொது இடங்களில் கண்கூடாகப்பார்க்கிறோம்.

எனவே, நாட்டுணர்வு, சமுதாய உணர்வு மிக்க தொழிலாளர்கள் வீர விளையாட்டுகளில் தங்களை முழுமையாகப் பயன்படுத்திக்கொண்டு, உடல்நலம் பெற வேண்டும்.

கோவை, விளையாட்டு விழாவில் கலந்துகொண்ட வீரர்கள், வீராங்கனைகள் அனைவருக்கும் இந்திய தேசிய தொழிற்சங்க காங்கிரஸ் INTUC சார்பில் மீண்டும் வாழ்த்துகிறேன்.

# தொழிலாளர் நலம் பாடுவோம் !

நாட்டுக்கோர் முதுகெலும்பாய் உழைக்கின்ற தோழன்
நலந்தன்னை நாம்பாடிக் களித்திடுவோம் இன்று !
வாட்டுகின்ற வெய்யிலையும் பொருட்படுத்த மாட்டான்
வயல்வெளியில் வேலை செய்யும் உழவனென்னும் தோழன்!
நாட்டுப் பணி ஒன்றேஅவன் நற்கருத்தாய்க் கொண்டு
நலம்பெறவே செய்கின்றான் நாட்டுமக்கள் வாழ !
வேட்டுவைத்து அந்நியரைத் துரத்துகின்ற தோழன் !
வீரமிக்க பாரதத்தின் தவப்புதல்வனாகும் !

வான்வெளியில் ஆர்யபட்டா ஏவுகணை விடுத்தோன்
வளமிகுந்த விஞ்ஞானத் தொழிலாளத் தோழன் !
மீன்விழியை நிதங்கண்டு வாழ்கின்ற தோழன்
மீனவன்என் கின்றநல் பரதவனே யாகும்.
மான்விழியின் அழகுதனைக் கண்டுதிறல் கொண்டு
மடமடென வரைந்திடுவான் ஓவியனும் தோழன் !
தேன்மொழியின் நாதமதைக் குழலிசையில் மீட்டித்
தெளிவுடனே புகட்டிடுவான் குழலிசையின் தோழன் !

உலகத்தில் ஒற்றுமையைக் காணுகின்ற தோழன்
உயர்வடையப் பலபணியைச் செய்திடுநல் வீரன் !
பலகலையை வளர்க்கின்ற பாட்டாளி வர்க்கம்
பாரினிலே சிறப்புமிகப் பெற்றிடவே வேண்டும் !
திலகமெனத் திகழ்கின்ற பாரதத்தின் புகழைச்
செயல்முறையில் உழைப்பதனால் வளர்க்கின்ற தோழன் !
நிலமெனவே மக்களுக்குப் பலநலன்கள் புரிவான்
செஞ்சுவக்க அன்னவனைப் பாடிடுவோம் நாமே !

கடமையினில் சற்றுமவன் தயங்கிடவே மாட்டான் !
கடும்உழைப்பால் நாட்டுவளம் கருதுகின்ற தோழன் !
மடமையோடு வறுமையினை வெற்றிகொளும் வீரன் !
மாநிதியாம் காந்தியண்ணல் வழியினிலே செல்வான் !
உடைமையினைப் பொதுவுடைமை ஆக்குகின்ற தோழன் !
உழைப்பொன்றே மூலதன மாகக்கொள்ளும் வீரன் !
அடிமையினை என்றென்றும் அகற்றிடவே செய்வான் !
அன்னைதிரு பாரதமும் உயர்ந்திடவே உழைப்பான் !

எண்ணமதைக் கவருகின்ற அழகுவனம் தன்னை
எழில்குலுங்கச் செய்பவனே தோட்டத்தொழி லாளி !
வண்ணமதை மலர்களிலே வைத்தவர்யார் என்றால்
வளமிகுந்த இயற்கைதரும் இறைவன்எனும் தோழன்!
பண்ணிசையின் பண்பழகை எழுப்புகின்ற தோழன்
பாவிசையின் மேன்மைமிகு பாவலனே ஆகும் !
கண்ஒளியின் கருமணியால் கடும் உழைப்பே ஈவோன்
கடவுள்எனும் தொழிலாளி கடமையிலே மிக்கோன் !

உற்பத்தி பெருக்கிடவே தொழிலகத்தி லுழைப்பான் !
　　உண்மையிலாச் சாதியதம் பார்த்திடவே மாட்டான் !
கற்றமொழி மாநிலமும் வேறுவேருய் இருப்பின்
　　கனிவுடனே உழைக்கையிலே வேற்றுமையைக் காணுன்.
அற்புதத்தின் அற்புதமாய் அழகுபணி செய்வோன்
　　அன்னைதிரு பாரதத்தை உயாத்திடவே உழைப்பான் !
கற்பனைக்கும் எட்டிடாத மாடமாளி கைகள்
　　கல்அடுக்கும் கொத்தனின் கைவண்ணந் தானே !

ஆழ்கடலில் வெண்முகத்தை வாரிவருந் தோழன் !
　　அழிவில்லாப் புகழாலே நிதம்வாழு கின்ருன் !
ஏழ்கடலுக் கப்பாலும் இனிதுடனே சென்று
　　ஏற்றமுற என்ணெயினை எடுப்பவனும் தோழன் !
பாழ்பட்டுப் போகாமல் பாரதத்தின் புகழைப்
　　பண்புநலம் மேலிடவே காப்பவனும் தோழன் !
காழ்ப்புணர்ச்சி இல்லாத தொழிலாளர் தம்மைக்
　　கனிவுடனே வாழ்த்திடவே பாடிடுவோம் நாமே !

பொதுவுடைமை ஒற்றுமையைக் காண்பவனும் தோழன் !
　　போற்றுபுகழ் பாரதத்தின் புகழ்மிகுந்த வீரன் !
எதுவரினும் கடமையிலே சற்றுமனந் தளரான்
　　எழில்மேவும் தொழிற்பணியை ஏற்றமுறச் செய்வோன்!
புதுவிதநற் பணியாலே நாட்டுநலம் ஓங்கப்
　　புதுமையினைக் காண்பவனும் தொழிலாளி யாகும் !
முதுகெலும்பாய் நாட்டுநலம் காண்பவனுந் தோழன் !
　　முன்னேற்றம் அடைவதெலாம் தொழில்வர்க்கத் தாலே !

இந்தியாவில் பிறந்தவனும் இத்தாலியில் இருப்பான் ;
　　இத்தாலியில் பிறந்தவனும் இந்தியாவில் உழைப்பான் ;
இந்தியாவின் புகழ்பரப்பி ஏற்றதொண்டாற் சிறப்பான் ;
　　இந்துதேச ஒற்றுமையைத் தொழில்முறையில் வளர்ப்பான்
எந்தமொழி பேசிடினும் இந்தியாவின் தோழன்
　　ஏழ்மைநிலை அகற்றுகின்ற தொழில்வர்க்க வீரன் !
விந்தைமிகு தொழில்நலத்தால் வீறுகொண்ட தோழன் !
　　வெற்றிகாண உரிமைக்குரல் எழுப்புகின்ற வீரன் !

கோடானு கோடிகரம் உயர்த்திமிக நாட்டைக்
　　கொள்கைவழி மாறிடாயல் செழிப்படையச் செய்வோன்!
ஓடாகத் தொழிலாளி தேய்ந்திட்ட போதும்
　　உண்மைவழி தனைவிட்டு மாறிடவே மாட்டான் !
தேடாத புகழெல்லாம் தொழிலாளர் தம்மைத்
　　தேடிமிக வந்து புகழ் கூடிமிக நல்கும்.
வாடாத உள்ளமதைக் கொண்டபெருந் தோழன்
　　வான்வெளியில் விண்கலத்தைச் செலுத்துகின்ற வீரன் !

பழியில்லாப் பாரதத்தின் புகழோங்க நாட்டில்
　　பண்புநலம் மேவிடவே பாடிடுவோம் பாட்டில் !
எழிலோங்கத் தொழிலகத்தைச் ஏற்றமுறச் செய்வோன்
　　ஏற்றிடுவோம் அவன் புகழைப் பாட்டினிலே நெய்வோம்!

அழிவில்லா ஆக்கம்பல காணுகின்ற தோழன்
　　அன்னை திரு பாரதத்தின் ஆற்றல்பெரு வீரன் !
தொழிலகத்தில் பணிபுரியும் தோழர்களைப் பற்றித்
　　தொழிலாளர் நலமோங்கப் பாடிடுவோம் நாமே !

உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனைகள் செய்வோம் !
　　உண்டுவீணுள் கழிப்பாரை நிந்தனைகள் செய்வோம் !
பழம்பெருநற்பாரதியின் தத்துவத்தைக் கொண்டு
　　பாரதமும் செழிப்படைய வழிவகைகள் செய்வோம் !
நிழல்தருநற் சோலையிலே கனிந்தபழம் போன்று
　　நெஞ்சுரத்தால் வலிமையினை ஏற்றபெரும் வீரன் !
பழகுதற்கும் இனியவனும் தொழில்புரியும் தோழன்
　　பாட்டாளர் நலமோங்கப் பாடிடுவோம் நாமே !

நானும்ஓர் தொழிலாளி என்றிட் டாலும்
　　நாட்டுநலம்! தனைக்கருதி நக்கீ ரன்போல்
தேனுகுநல் மெழுகென்ன நினைந்த வாறு
　　சிற்சிலவாம் கருத்துகளைச் சொல்லு கின்றேன்,
ஆனுகுநற் பாலிடைசேர் நீர்பி ரிக்கும்
　　அன்னம்போற் கவிகேட்பீர் ! ஆய்ந்து கொள்வீர் !
வானுகுநல் மழைபோலத் தொழிலா ளர்க்கு
　　வாழ்வுதரும் தமிழேஎன் வாக்கு மாகும் !

தொழிலாளர் நலமோங்க வேண்டு மென்ருல்
　　தொண்டுசெய்த தலைவர்களை வாழ்த்த வேண்டும் !
எழிலான மனைமக்கள் பேணு யாப்போல்
　　ஈன்றதாய் தந்தைகுரு போற்ற வேண்டும் !
தொழிலேதம் வழிபாடாய்க் கருத வேண்டும் !
　　சொன்னபடி நடந்திடுமோர் துணிவும் வேண்டும் !
